நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 4

தொகுதி: 113

திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்

விலை: ரூ.20

ஏப்ரல் - 2019

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ்மணம் 4

2. சிலம்புப்புதையல் - சிந்திக்க! சீர்தூக்க! தெளிக! 6
   - முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. வீரசோழியம் 10
   - பேராசிரியர் ப.மருதநாயகம்

4. சொல்லியல் கோட்பாடு 17
   - பேராசிரியர் செ.வை.சண்முகம்

5. தமிழ் இலக்கண, இலக்கியத்தில் ஒட்டகம் 24
   - பேரா முனைவர் இ.கி.இராமசாமி

6. கல்வெட்டில் 'கல்வி' 29
   - முனைவர் பி.ஆறுமுகம்

7. சங்கச் செய்திகள் 40

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

நூலைப் படித்துவிட்டு அந்த நூலைப்பற்றித் தாம் ஒரு நூல் எழுதுதல் வழக்கமாகிவிட்டது. பெரும்பான்மையும் நூல்கள் பாராட்டுரை யாகவே அமையும். பல நிறுவனங்கள் புராண இதிகாச காப்பியப் புராணச் சொற்பொழிவாளர்களை விளம்பரப்படுத்தி மக்களிடம் தங்களை மேட்டுக்குடிகளாகக் காட்டிவரும் காலம் இது. நூலைத் திறனாய்வு செய்வதற்கு இடம் இருக்காது. அந்த நூல்களின் தாக்கத்தால் மக்கட் சிந்தனையில் சிதைவு ஏற்படுவதை சுட்டிக்காட்ட அனுமதி மறுக்கப் படுகிறது. ஒரு நூலின் தாக்கம் மக்கள் வரலாற்றில் ஏற்படுத்தியிருக்கிற மனச்சிதைவு குறித்த கவலை கல்வியாளர்களுக்கு இருப்பதில்லை

பேராசிரியர் இளங்குமரனார் "சிலம்புப் புதையல்" என்னும் தலைப்பில் எழுதியுள்ள செய்திகள் வாசகர்களின் மீள்பார்வைக்குரியது. சங்க இலக்கியத்தில் ஊழ் என்பது இயற்கையின் இயல்பு திரிந்த தாக்கம் வாழ்க்கையில் ஏற்படுத்துகின்ற உலகியல் துன்பங்களின் விளைவுகளை எதிர்கொள்ளும் அறிவும் மானிட முயற்சியும் பேசப்படுகிறது.

இளங்கோவடிகள் சமயம் சார்ந்த பார்வையில் ஊழை, ஊழ்வினையாக்கி மக்கள் மனத்தைப் பேதமைப்படுத்தி பஞ்சாங்கமும், சோதிடமும் பார்க்கத் திசை திருப்பிய முன்னவர்களின் முதல்வராக விளங்குகிறார். வினைக்கோட்பாட்டுக்கு முதல் நூலாகவும் முடிந்த நூலாகவும் விளங்குவதை ஆசிரியர் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

மூவேந்தர்களும் வேள்விச் சாலையைத் தொடங்கி வைத்து புரோகிதர்களை முன்னிலைப் படுத்துவதை ஆசிரியர் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. நாடு முழுவதும் மேல்தட்டு மக்கள் என்று தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ள நினைப்பவர்கள் புரோகிதர்களை வைத்து தீ வளர்த்து திருமண நிகழ்ச்சியை நடத்துவது தங்களுக்குப் பெருமை என மக்கள் மத்தியில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். புரோகிதர்களின் செல்வாக்கால் தமிழ்ச் சமுதாயத்தில் பாரம்பரியப் பெயர்கள் திரிந்து உச்சரிக்க முடியாத பெயர்கள் தமிழ்க் குழந்தைகளுக்குப் பெயர்களாக வைக்கும் அறியாமை பெருகி வருகின்றது.

அறிவுக்குப் பொருந்தாக் கூற்றுக்கள் அனைத்தும் இந்த நாட்டில் மேலோங்கி வருவது அனைவரும் அறிந்தது. பேராசிரியர் இளங்குமரனார் படித்தவர்கள் திசைதவறிய பயணம் போகிறார்கள்; திரும்பிப் பாருங்கள்; உங்கள் பாதை தவறு என முதுமைக்காலத்தும் உறுதிபட எழுதுகிறார். சிந்திக்க !

பேராசிரியர் ப.மருதநாயகம் வீரசோழியம் என்னும் இலக்கண நூல் குறித்த விரிவான ஆய்வுரை செந்தமிழில் தொடர்ந்து வருவது

குறிப்பிடத்தக்கது. வீரசோழியம் வடமொழியாக்க இயக்கத்தின்போது தோன்றிய நூல் ஆகையால் தமிழ் இலக்கணத்தை வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதியுள்ளதை மனத்தில் கொள்ளாத பிறர் வீரசோழியத்தை வடமொழி இலக்கணம் தழுவியது என்ற தவறான கோட்பாட்டுடன் சிந்தித்திருக்கிறார்கள். அதன் விளைவாக வீரசோழியம் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதையே பேராசிரியர் பல்வேறு ஆய்வாளர்களின் உரைமேற்கோளுடன் எடுத்துரைப்பது வாசகர்கள் ஆழ்ந்து கற்க வேண்டிய செய்தியாகும்.

தொல்காப்பியம் சொல்லியல் கோட்பாடு குறித்துப் பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்களுடைய கட்டுரைத்தொடர் இடம்பெறுகிறது. பேராசிரியர் தொல்காப்பியத்தில் உள்ள மொழியியல் நுட்பங்களை விளக்கும் சொற்றிறம் கற்று இன்புறத்தக்கது. “தொல்காப்பியம் தமிழ்மொழி அமைப்பை விளக்கும்போது புலனாகும் மொழியியல் நுட்பங்கள் மேலும் மேலும் தொல்காப்பியத்தை ஆராயத் தூண்டுவதாக அமைகிறது. அதைத் தமிழ் மாணவர்களுக்கு எடுத்துரைத்து அவர்களையும் தொல்காப்பிய மொழியியல் ஆய்வில் ஈடுபடுத்த தூண்ட வேண்டும்” என்பதே பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்களின் நோக்கம். தாம் பெற்ற இன்பம் தமிழ் மாணவர்கள் பெற வேண்டும் என்ற குறிக்கோளுடைய சான்றோர் பேராசிரியர்; அவர்கள் எழுதியுள்ள தொல்காப்பிய பயிலரங்கக் கட்டுரையைப் படித்து மொழி நலம் பெறுக.

“தமிழ் இலக்கண இலக்கியத்தில் ஒட்டகம்” என்னும் பேராசிரியர் இ.கி.இராமசாமி அவர்களின் கட்டுரை இடம்பெறுகிறது.

தமிழகத்தில் ஒட்டகம் அரிதே காணப்படும் விலங்கு. அதன்பயன்பாடும் மிகக் குறைவு. புராணங்களில் யானை சிறப்பிக்கப்படுவதால் கோயில்களில் அவற்றைப் பேணிப் போற்றுகிறார்கள். ஆனால் ஒட்டகம் அத்தகைய பேற்றைப் பெறவில்லை. தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஒட்டகம் குறித்த செய்தியோடு தொல்காப்பிய மரபு இயலிலும் இடம்பெற்றிருப்பதை பேராசிரியர் எடுத்துரைத்து அதன் பால் ஒரு கனிந்த பார்வையை ஏற்படுத்தியிருப்பது கற்று இன்புறத்தக்கது. பேராசிரியர் இ.கி.இராமசாமி நாடறிந்த முதுபெரும் அறிஞர்; செய்திகளை நயம்பட எடுத்துரைக்கும் கலைநலமும் கல்விநலமும் உடைய சான்றோர்.

முனைவர் பி.ஆறுமுகம் அவர்கள் “கல்வெட்டில் கல்வி” குறித்த விரிவான ஆராய்ச்சித் தகவல்களை வழங்கியுள்ளார். கட்டுரை மேலும் ஆய்வு மேற்கோள்வதற்குரிய குறிப்புகள் நிறைந்துள்ளதால் மாணவர்களுடைய ஆராய்ச்சிக்கு தோற்றுவாய் செய்துள்ளார். பள்ளி என்பது சமணர் இருப்பிடத்தை குறிப்பதாகவும் கன்னடத்தில் ஹள்ளி என்றும் வழங்கும். இது குறித்த மாணவர்கள் மேலும் சிந்திக்கலாம்.

5 சிலம்புப் புதையல்

சிந்திக்க! சீர்தூக்க! தெளிக!

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

இளங்கோவடிகள் காலத்திற்கு முன்னைக்காலம் **தனிப்பாடல் காலம்**. நேரிடை நின்றது போலவும், நேரிடை நிகழ்வது போலவும் அகம்; புறம் எனப் பொருள் வகையில் சான்றோர்கள் போற்றிப் பாடிய காலம்.

அப்பாடல் வகையில், நெடியதாம் பத்துப் பாட்டெனினும், தனிப்பாட்டே! பத்துப்பத்து, நூறு நூறு எனினும் - தனித் தனிப் பாக்களே!

அத்தனி மலராம் பாடல்களைத் தொடையலாக - **மாலையாகத் - தொடுத்த** - முதல்வர், முதற் காப்பியப் படைப்பாளி **இளங்கோவடிகளே**!

அன்றியும், காப்பிய இலக்கணம் தம் காப்பியத்தால் வடித்துக்கொள்ள வைத்த, **காப்பிய இலக்கணமும்** அடிகளே.

தமிழைச் செந்தமிழ், தண்டமிழ் என்னும் அடைகளோடு, இயலிசை நாடகத் தமிழ் ஆகிய **'முத்தமிழ்'** என வழங்கச் செய்த முன்னவரும் அவரே.

முத்தமிழ் என்பதோடு, **"உரையிடை யிட்ட பொருட்டொடர்"** என்னும் பேறு தமிழுக்கு வழங்கியவரும் அவரே.

மூவேந்தரையும், முந்நாட்டையும், முத்தலைநகரையும் ஒப்பவைத்து ஒருங்கிணைக்க முயன்றவரும் **பெருந்தகை அடிகளே.**

துறவரொருவர், **இல்லறக் காப்பியம்** இயற்றலிலும், அவ்வுகையிலும் **பெண்மையைத் தெய்வ நிலைக்கு** ஏற்றிப் போற்றுபவரும், பிறபிற வேந்தர்களும், பிறபிற நாட்டவரும் ஏற்றதுரைப்பவரும் - தனிப்பெருந் **தவஅடிகளார் அவர்களே**!

எவ்வெச் சமயத்தார்க்கும் அவ்வச் சமயச் சால்பவராகத் தோன்ற, பெருந்தெய்வம் சிறுதெய்வம் எனப் பாகுபாடும் இல்லாமல், ஒத்ததறிந்து யாத்தவர் அடிகளே.

பின்னைச் **சீட்டுக்கவி - கடிதம் - ஊடகம்** என்பவற்றுக்கு எல்லாம் முன்னவராக இருந்து தம் படைப்பால் வெளிப்படுத்தியவர் எதிரது உணர்ந்த தவ அடிகளே!

'தம் வரலாறு' எழுதாத் தமிழர் பெருங்குறைபாட்டை நீக்கி, பின்னே **மெய்க்கீர்த்தி, வரலாறு** என எழுதிவைக்க வேண்டும் என்னும் இன்றியமையா மரபை முன்னோடியாக நின்று நிலைநாட்டிய நீடிய

புலமைத் தோன்றல் **குணவாயில் கோட்டத்து அரசு துறந்திருந்தும் தமிழைத் துறவாத தூய துறவி இளங்கோவடிகளே!**

வாரப்பாடல், வரிப்பாடல், நாட்டுப்பாடல் என்னும் நாட்டுப்புறப் பாவெல்லாம் கூட்டுக்குள் தேக்கிய **முன்னோடிப்பாவலர் இணையிலா** இளங்கோவடிகளே! இவை ஒரு பாலாக, மற்றொருபால் **'சிந்தனைக்குரியவை சிலவற்றுக்கு முந்தையர் அவரே'** என்பதையும் விட்டுவிட முடியாது! ஆய்வு என்பது **'சமன்'**!

சங்க இலக்கியத்தொகையும் பாட்டும் 2381. திருக்குறள் 1330 தொல்காப்பியம் 1610 ஆக **5321 பாடல்களில், ஊழ், ஊழ்க்கும், ஊழ்த்த, ஊழ்ப்ப, ஊழ்ஊழ், ஊழி** என்றே **96** இடங்களில் வந்திருந்தும், அவற்றைத் துறை போகக் கற்றிருந்தும், திருக்குறளில் **'ஊழ்'** என்பதற்கு, **'உலகத்து இயற்கை'** என ஈரிடங்களிலும் (374, 637) பேரா இயற்கை என ஓரிடத்தும் (370) காட்டியுள்ளமை தெளிந்தும்,

ஆகூழ், போகூழ் என (371, 372) இரு குறள்களில் காட்டியும், அவ்வூழின் ஆக்கல் அழித்தலை,

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை" (15)

எனக் கண்காண் சான்று காட்டிய தறிந்திருந்தும், அடிகள் தம் **சமய அழுத்தத்தால் 'ஊழ்'** என்பதொடு **'வினை'** என்பதை இணைத்து, அனைத்தும் **வினைப்பயனே** என **எழுவாய் முதல் இறுவாய் வரையும் கொண்டு செல்வது, "மூத்தவன் இருக்க இளையவனே ஆளும் குறிப்புடையன்" என்று நிமித்திகன் சொன்னதை,**

"உன்சொல்லைப் பொய்யாக்குவேன்"

என்று துறந்து சென்று - நிமித்திகன் உரையைப் பொய்யாக்கிய - **அடிகள் புனைவு, சிந்திக்கத்தக்க தாகின்றது!**

தீவினை அச்சம் (21) தெரிந்து வினையாடல் (52) வினைசெயல் வகை (68) வினைத்திட்பம் (67) வினைத்தூய்மை (66) என்னும் 'வினை' தழுவு அதிகாரங்களில் வரும் வினைகள் ஊழ்வினையா?

எல்லாமும் ஊழ்வினைப்படி நடக்கும் என்றால், **அறவுரை ஏன்? அறமன்றமேன், அரசேன், காவலர்ஏன், சிறையேன், படையேன்? தண்டமேன்? இட்டுக் கட்டப்பட்ட 'நிழல்' நீளுகிறதே தேர்ந்த அடிகளிடம்?**

அகநானூற்றுப்பாடல்கள் 86, 136 ஆகிய திறமான பாடல்கள்,

"புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடி"

நடத்திய திருமணம் - அன்றே பொதுச் செய்மகளிர் **'ஒரிற்படுத்த'** சீர்மைத் **தமிழர் திருமணம்**

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது" (1:52-53)

என்று **வேதிய மணமாகக் காட்டியவர்** அடிகள் தாமே! **'மணிவிழா'** என்னும் **'இல்லறத்துறவு'** நெறியையும்,

'அறுபதாம் கலியாண' மாக்கியதும், **தாலி மாற்றுவதும்** ஆகிய பண்பாட்டுச் சிதைவு மூலம் - இச் **சிலம்புக் காட்சி தானே!**

சிலம்பில் இடைச்செருகல் பல உண்டெனினும், இவை இடைச் செருகல் இல்லையே!

பலவற்றை விரிக்காமல் ஒன்றை மட்டும் சுட்டி அமைவோம்.

கண்ணகியார் கடவுண் மங்கலம் செய்யப்பட்டார். நித்தல் வழிபாடு செய்ய ஏற்பாடு செய்த **செங்குட்டுவன் முன் மாடல மறையோன் தோன்றி,** ஏற்பாடுகளைச் செய்கிறான்.

"பூவும் புகையும் மேவிய விரையும்
தேவந் திகையைச் செய்கென் றருளி
வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவன் நின்றோன்"

இத் தேவந்தி கண்ணகியாரின் **பார்ப்பனத் தோழி! "சோமகுண்டம், சூரிய குண்டம் மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழச் சொல்ல,**

"*பீடன்று*"

என்று, **கண்ணகியாரால் மறுத்துக் கூறப்பட்டவள்!**

வேந்தன் - **செங்குட்டுவன் - என்ன ஆனான்? அடிகள் சொல்கிறார்:**

"மாடல மறையோன் தன்னொடும் கூடித்
தாழ்கழல் மன்னர் தன்னடி போற்ற
வேள்விச்சாலையுள் வேந்தன் போந்தபின்
யானும் சென்றேன். (30 : 168-171)

வேள்விச் சாலையுள் வேந்தன் போனான்; அதன் பின், **அடிகள் கடவுள் மங்கலம் செய்த கோயில் பக்கம் சென்றார்.**

வேந்தன் எவ்வழி? மக்கள் அவ்வழி!

பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி - பாண்டியன்

*இராச சூய யாகம் வேட்ட பெருநற்கிள்ளி - **சோழன்!***

வேள்விச் சாலையுள் சேரன்செங்குட்டுவன் - சேரன்!

மக்களாட்சிக் காலத்தேனும் மக்கள் மக்களாக இருக்கச் சிந்திக்க வேண்டும் அல்லவா!

சுட்டப்பட்டவை அடிகளார் குறையா? இல்லை! ஏன் இல்லை! பற்றறப் பற்றற்றானைப் பற்றல் தானே! அடிகள் பற்று **பற்றற்றான் ஆகிய அருகதேவன் பற்றியிருந்த வினைப்பற்று! பாதிரிப்பூ வைத்த கலத்தில் அப்பூவை எடுத்தாலும் மணம் நீங்காது!** என்பது கருதுக! எவ்விலக்கியமும் பதிவும் அவ்வக் **காலக் கண்ணாடி!** அக்காலக் கண்ணாடி, **வேதிய ஆட்டத்தைப் பதிகிறது!** காலமும் இடமும் முதற்பொருள்கள்! அவை ஒன்றை ஒன்று தழுவி நிற்பவை! **அவற்றைப் பதிகிறார் எனத் தெளிக!** தெளிந்தால் அடிகள் தகவே புலப்படும்!

நாலடியார் தெளிவுரை

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

கல்வியின் பரப்புக்கு எல்லை இல்லை; அதைக் கற்பவர் வாழ்நாள் எல்லையோ சிறிதாகும். அச் சிறு வாழ்நாளிலும் நன்றாக எண்ணிப் பார்த்தால் வரும் நோய்கள் பலவாகும்; ஆதலால், நீரை விலக்கிப் பாலைப்பருகும் அன்னம் போலச் சாரமிக்க நூல்களையே சான்றோர் தெளிவாக ஆராய்ந்து கற்பர்.

முதுமுனைவர்
இரா.இளங்குமரனார்

வீரசோழியம்

பேராசிரியர் **ப.மருதநாயகம்**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை 600113.
கைபேசி : 9442787727

சென்ற இதழின் தொடர்ச்சி

வீரசோழியத்தின் பொருளையும் யாப்பையும் பற்றிய பகுதிகளில் வடநூல் ஏதும் இடம்பெறவில்லை. அணிபற்றிய பகுதி இலக்கியத்தை உருவகிக்கும் பாங்கு சிறப்பானது. மொழி உடலாக, உயிர் பொருளாக, வண்ணம் நிறமாக, நடையே செலவாக, அலங்காரம் அணிகலனாக இலக்கியம் நடமாடும் காட்சி அழகின் உச்சமாகும்.

சங்க அக இலக்கிய மரபை விளக்கும்போதும் **வீரசோழியம்** வடநூல் மரபிற்கு இடம் தரவில்லை. **யாப்பருங்கலவிருத்தியைப்** பின்பற்றி அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்ற நான்கு வகைகளைக் குறிப்பிட்டு அகக்கவிதையின் இருபத்தேழு கூறுகளை வரையறை செய்கிறது. இக்கூறுகளில் பல புறம், அகப்புறம், புறப்புறம் ஆகியவற்றைச் சார்ந்தவை.

வீரசோழியத்தின் விளக்கவுரை பெருந்தேவனால் செய்யப்பெற்றதென்பதைச் சொல்லும்போது நவின்றான் தமிழ் காதலின் கற்பவர்க்கே என்று தமிழை விரும்பிப் பார்ப்பார்க்குத் தரப்பட்ட பொழிப்புரை அது என்பது அடிக்கோடிட்டுக் காட்டப்பெறுகிறது. உரைதரும் சான்றுப்பாடல்கள் யாவும் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முன் எழுதப்பெற்ற தமிழ் இலக்கியங்களிலிருந்து எடுக்கப் பெற்றவையே. எட்டுத்தொகையும், திருக்குறளும், குண்டலகேசியும், சூளாமணியும், யாப்பருங்கலமும் அதன் உரையும் வேறுபல அடையாளம் காணமுடியாத தமிழ் இலக்கியங்களும் சிறப்பிடம் பெறுகின்றன. அவிநயனார், மயேசுவரனார், காக்கை பாடினியார் போன்ற பலர் பெயர்களையும் விளக்கவுரையிலிருந்து அறிகிறோம். குறட்பாக்கள் 58 இடங்களில் மேற்கோள்கள் ஆகின்றன. குறுந்தொகையின் 124, 216 ஆம் பாடல்களும், புறநானூற்று 345 ஆம் பாடலும் உரையாசிரியரைக் கவர்ந்தவை.

VI

பேராசிரியர் சு.இராசாராம் தமது **வீரசோழிய இலக்கணக் கோட்பாடு** என்னும் ஆய்வு நூலில் வீரசோழியம் ஒரு புடைமாற்று ஒப்புமை இலக்கணம் (Transfer grammar) என்பார்.

> இவ்விலக்கணம் தாய்மொழியைத் தவிர மற்றொரு மொழியைக் கற்கும் அல்லது கற்பிக்கும் சூழலில் எழுதப்படுகின்றது. இச்சூழலில் தாய்மொழி இலக்கண அறிவைத் தூண்டுவதின் மூலமாகக் கற்கப்படும் அல்லது கற்பிக்கப்படும் மொழியின் இலக்கணத்தை எளிதாகக் கற்க அல்லது கற்பிக்க இயலும் என்பதும் தாய்மொழி மற்றும் கற்கவிருக்கும் அல்லது கற்பிக்கவிருக்கும் இலக்கணங்களிடையே காணப்படும் அமைப்பு ஒற்றுமைகள் கற்றலை அல்லது கற்பித்தலை எளிதாக்கும் என்பதும் இவ்விலக்கணத்தின் தற்கோள்களாகும். இத்தற்கோள்களின் அடிப்படையில் தாய்மொழி இலக்கணம் கற்று அல்லது கற்பிக்க விருக்கும் மொழிக்குப் புடை மாற்றப்படுகிறது. உலக மொழிகளின் இலக்கண வரலாற்றில் இடைக்காலத்தில் தோன்றிய ஓர் இலக்கண வடிவம் இது.
>
> புடைமாற்று ஒப்புமை இலக்கணம் புடைமாற்று ஒப்புமை விதிகளாலானது. வீரசோழிய நூற்பாக்கள் புடைமாற்று ஒப்புமை விதிகளாகும்...
>
> புடைமாற்று நிகழ்வின் போது புடைமாற்றத்திற்காகத் தாய்மொழி இலக்கணமான வடமொழி இலக்கணத்தையும் கற்கவிருக்கும் இலக்கணமான தமிழ் இலக்கணத்தையும் ஒப்புமைப்படுத்தி ஆராயும்போது இவ்விரு இலக்கணங்களும் தத்தம் மூல இலக்கணங்களிலிருந்து சுருங்குவதும் மாறுவதும் தவிர்க்கமுடியாத விளைவுகளாகும். வீரசோழியம் சுருங்கியதும் தொல்காப்பிய இலக்கண மரபினின்று சிறிது மாறியதும் புடைமாற்று ஒப்பியலாகும். (பக்.320-321)

வீரசோழியத்தை இவ்வாறு பார்ப்பதால் சில நன்மைகள் உண்டென்றாலும் அது வடமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குத் தமிழ்மொழி இலக்கணம் கற்பிப்பதற்காக எழுந்த நூல் என்ற கருத்து வீரசோழியத்து ஆசிரியராலேயோ, உரையாசிரியராலேயோ எங்கும் வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ

சொல்லப்படவில்லை. வடமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் யாரும் எக்காலத்தும் எவ்விடத்தும் இருந்ததில்லை என்பது மேலை மொழியியல் அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ள வரலாற்று உண்மையாகும். ஓங் அடிகளார் (Rev.Walter J.ong) என்பார் தமது **Interfaces of the word** எனும் ஆய்வு நூலில் பழம் கிரேக்கம், இலத்தீன், பழம் சீனம், சமஸ்கிருதம் போன்ற செம்மொழிகளெல்லாம் எங்கும் என்றும் யாருக்கும் தாய்மொழிகளாக இருந்தவை அல்லவென்றும் பள்ளிகளில் ஆண்பிள்ளைகளுக்கு ஆண் ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்ட மொழிகளாகவே இருந்தவையென்றும் அவை என்றும் பேச்சுவழக்கில் இருந்தவை அல்லவென்றும் அவற்றின் சொற்கள் பொருள் மாற்றம் பெறாது ஒரே நிலைத்த பொருளைக் கொண்டிருந்தமையாலேயே தத்துவம், இறையியல், சட்டம் போன்ற துறைகளில் நூல்கள் எழுதப்பயன்பட்டனவென்றும் தெளிவுபடுத்துவார். மேலும் வீரசோழிய ஆசிரியரின் நோக்கம் சமஸ்கிருத மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பிக்க வேண்டும் என்பதாக இருந்தால் தமது நூலைச் சமஸ்கிருதத்தில் எழுதாமல் ஏன் தமிழில் எழுதினார் என்ற கேள்வியும் எழுகின்றது. தமிழ் அணியிலக்கணத்தை வடமொழியாளருக்குக் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தண்டியாசிரியர் தமது **காவியாதர்சத்தை** வடமொழியில் எழுதியிருப்பது எண்ணிப் பார்க்கத்தக்கது. பாணினீயம், காதந்திரம், கச்சாயனம் ஆகிய இலக்கணங்களில் காணும் கலைச் சொற்களை எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் வீரசோழியம் பயன்படுத்திக் கொள்கிறது. இச்சொற்களின் பட்டியலை இராசாராம் கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தருகிறார்: படலம், சந்தி, வர்க்கம், உலோபம், ஆகமம், ஆதேசம், விருத்தி, குணம், தத்திதம், தாது, காரகம், காணம், கோளி, அவதி, ஆதாரம், உபகாரகம், அசலம், சலம், தீபகம், நாமம், தற்புருடன், கன்மதாரயம், துவிரு, துவந்துவம், அவ்வியபாவம், விதியாரிலக்கணம், திகந்தரானம், இதரேதகம், சமாகாரம், சமாசம், பிரத்தியம், காரிதம், காரிதக் காரிதம், காரிதக் காரிதக்காரிதம், சந்திராந்தம், துமந்தம், துவாந்தம், கிரியாபதம், பரோக்கம். (ப.254)

வீரசோழிய உரையாசிரியர் பயன்படுத்தும் கலைச்சொற்கள்: பிரகிருதி, ஏகவசனம், பகுவசனம், உதாத்தம் சுப்பிரத்தியம், விடயாதாரம், மத்திமபத லோப சமாசம், பகுவிரீகி, வியஞ்சனம்,

திரப்பியம், திரப்பியப்பிரத்தியம், பாவம், பிரத்திய சாதி பதம், பிராதிபதிகம், பிராதி, அநுராகம், விகாரம், உபகாரம், ஓங்காரம், அலங்காரம், கேவலக்கருத்தா, கேவலக்கருமம், துமந்தப் பிரத்தியாந்த பதம், புருடன், பிரதம புருடன். (ப.255)

வீரசோழிய ஆசிரியர் பயன்படுத்தும் தமிழ் இலக்கணக் கலைச்சொற்கள்:

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அதிகாரம், மெய், ஆய்தம், பெயர், மெல்லினம், வல்லினம், குறில், நெடில், அளபு, வல்லொற்று, மெல்லொற்று, வல்லெழுத்து, வினா, புள்ளி, சுட்டு, குற்றெழுத்து, ஒற்றெழுத்து, உயிர்மெய், உயிர், மாத்திரை, உந்தி, உரம், மூக்கு, கண்டம், அண்ணம், பல், இதழ், நா, மொழி, உறுப்பு, முயற்சி, இடையினம், ஈற்றெழுத்து, மொழி விகாரம், தனிமொழி, வன்மையொற்று, குற்றுகரம், முற்றுகரம், நெட்டெழுத்து, வேற்றுமை, தொகை, சாரியை, எழுவாய், கருத்தா, கருமம், விளிவேற்றுமை, அளபெடை, உருபு, முன்னிலை, பண்புத்தொகை, உவமைத்தொகை, அன்மொழித்தொகை, உம்மைத்தொகை, வினைத்தொகை, பன்மை, கூட்டெழுத்து, வினைக்குறிப்பு, பலர், பலர்பால், பல, பலவின் பால், தன்மை, இடம், காலம், ஒருமை, படர்க்கை, இறப்பு, எதிர், வினை (பக்.256-57)

நேர்மையுணர்வோடும் மொழிநூல் அறிவோடும் இக்கலைச் சொற்களை ஒப்பிட்டுப் பார்ப்பார் தமிழ் இலக்கணக் கலைச்சொற்களின் மேம்பாடு, பொருத்தம், அழகு ஆகியவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

VII

பிரான்சுவா குரோ (Fransios Gros) என்னும் பிரெஞ்சுக் கல்வியாளர் தமது "Five times five in twenty five: around the commentaries on the book of love of Tiruvalluvar" என்ற நீண்ட தலைப்பைக் கொண்ட கட்டுரையில் தொல்காப்பியர் கூறும் ஐந்திணை ஒழுக்கத்தின் செல்வாக்கைப் பற்றி விரிவாகப் பேசுகிறார். "**வீரசோழியம்** தமிழ் இலக்கணத்தை முறையாக வடமொழி இலக்கணத்தின் கலைச்சொற்களைக் கையாண்டு விளக்குகிறது. ஆனால் அகப்பொருள் பற்றிப் பேசும் பன்னிரண்டு நூற்பாக்களும் தமிழ் மரபை முற்றும் தழுவி அமைந்துள்ளன" என்று வீரசோழியம் பற்றி அவர் தம் கருத்தை அறிவிப்பார். வடமொழியாக்க இயக்கத்தின்போது தோன்றியதாயினும் இது ஐந்திணைச் சட்டகத்தை

உள்ளவாறு எடுத்துக்கொள்கிறது என்பது அவருக்கு வியப்பைத்தரும் செய்தி.

> Paradoxically, the treatise on grammar and poetics which incarnates the Sanskritization Movement, the Viracoliyam, remains faithful to the frame work of the five regions; but many others, including Parimelalakar, apropos the **Book of love** reduce Tamil eroticism to the two broad categories of the Sanskrit Kamasutra(s): pleasure (Sambhoga) and Separation (vipralaueha).

பரிமேலழகரும் பிறரும் வீரசோழியம் போலல்லாமல் திருக்குறளின் காமத்துப்பாலுக்கு விளக்கம் தரும்போது புணர்ச்சி, பிரிவு எனும் இரண்டு பெரும்பகுதிகளையே எடுத்துக்கொண்டு வடமொழிக் காமசூத்திரங்களின் வழியைப் பின்பற்றுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டுவார்.

வீரசோழியமும் அதன் உரையும் பதினோராம் நூற்றாண்டில் தோன்றியவை என்பதைச் சுட்டிக்காட்டி பொருளிலக்கணத்தைப் பொறுத்தமட்டில் அவை தொல்காப்பிய மரபை முற்றும் தழுவியிருப்பதை அன்னார் எடுத்துக்காட்டுவார்.

> Here (in **Viracoliyam),** for the first time, Tamil grammar is systematically presented in the terms of Sanskrit grammar; but the dozen stanzas allotted to the subject of love, which are the most poorly edited, have exceptionally conserved the subject and terms of the Tamil vision. (p.160)

VIII

வீரசோழியம் ஐந்திலக்கணமும் தனித்தனியாகக் கூறுவதென்பதால் அதுவே முதன்முதலில் யாப்பையும் அணியையும் பற்றிப் பேசிய நூல் என்ற தவறான எண்ணம் எழுந்துள்ளது. வீரசோழிய ஆசிரியர், 'எழுத்துச்சொல் நற்பொருள் யாப்பு அலங்காரமென்னும் பரப்பைச் சுருக்கித் தாம் சொல்வதாகக் குறிப்பிடுவார். அலங்காரம் பற்றிய பகுதி 'அலங்கார அதிகாரம்' என்று அழைக்கப்படுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய **அச்சணந்தி மாலை** ஐந்திலக்கணங்களையும் தனித்தனியாகச் சுட்டுகிறது. நன்னூலின் சிறப்புப்பாயிரம் ஐந்திலக்கணங்களையும் அரும்பொருள் ஐந்து என்று சிறப்பிக்கிறது.

> குணகடல் குமரி குடகம் வேங்கடம்
> எனும் நான்கெல் லையின் இருந்தமிழ்க் கடலுள்
> அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்
> தொகை வகைவிரியில் தருக என.

தொல்காப்பியப் பொருளதிகாரம் பொருளைப் பற்றி மட்டுமின்றி யாப்பு, அணி ஆகிய இரண்டு பற்றியும் பேசுகிறது. பொருளை விளக்குவது உவமையென்பதால் பொருளதிகாரத்துள் உவமயியல் சேர்க்கப்பட்டுள்ளது. அகத்திணையியல் உவமத்தை உள்ளுறை உவமம், ஏனை உவமம் என இரண்டாக்கிச் சுருக்கிக் கூற, உவமயியல் அவற்றை விரித்துக் கூறுகிறது. உவமக் கூறுபாடுகள் தொழில், பயன், வடிவு, வண்ணம் என நான்காக வகைப்படுத்தப்பெறும். உவமம் எல்லா அணிகளுக்கும் அடிப்படையென்பதாலும் அது செய்யுளின் இன்றியமையாத உறுப்புகளுள் ஒன்று என்பதாலும் தொல்காப்பியர் இவ்வாறு செய்துள்ளார் என்பதைப் பேராசிரியர் உரையால் அறியலாம். உவமமே செயற்கையணியென்ற கருத்து உலகக் கவிதையில் அறிந்தார் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். தண்டியலங்காரத்தில் 'மாறுபடவந்த உவமத்தோற்றங்களெல்லாம் வெவ்வேறு பெயர்கள் பெறுகின்றன. இவை மேலும் மேலும் செயற்கைத் தன்மை பெற்று விளங்கக் காணலாம். உவமையே எல்லாப்பொருள் அணிகளுக்கும் அடிப்படையானது என்ற உண்மையை,

உவமையென்னும் தவலரும் கூத்தி
பல்வகைக்கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறுமகிழ்ச்சி பூப்பநடிக் கும்மே

என்ற பாடலாலும் அறியலாம்.

தமிழின் அணியிலக்கண வரலாற்றை ஆராயும் மு.அருணாசலம் அணியிலக்கணம் எட்டாம் நூற்றாண்டிலேயே தோன்றிவிட்டது என்பதற்குச் சான்றுகள் தருவார். இறையனார் களவியல் உரை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், யாப்பதிகாரம், பொருளதிகாரம் என்று நான்கைக் குறிக்கிறது. "பிற்காலத்தில் யாப்பருங்கல விருத்தியுரை முதலியன அணியியல் என்ற பெயரால் ஓர் அணியிலக்கண நூலைக் குறிப்பிடுகின்றன. இந்நூல் எட்டாம் நூற்றாண்டில் தோன்றியது என்று சொல்லக்கூடும். இது நூற்பாவால் ஆனது. இதுவே தமிழில் முதல்முதல் தோன்றிய அணியிலக்கண நூலாகும். இந்த நூல் இன்று இல்லை."
வீரசோழிய அலங்காரப் படலத்தில் அணிக்கு விளக்கமாக 105

நூற்பாக்களும் எடுத்துக்காட்டாகப் பல வெண்பாக்களும் உரையாசிரியரால் தரப்படுகின்றன. இந்நூற்பாக்கள் அணியியலிலிருந்து எடுக்கப்பட்டிக்கலாமென்றும் **அணியியல்** என்னும் நூலே தனியே தமிழ் மரபில் அணியிலக்கணங்களைக் கூறுவதென்றும் இது தரும் பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்களேயென்றும் அருணாசலம் எடுத்துரைப்பார்.

வடமொழி அணியிலக்கணம் செய்த தண்டி தமிழ்நாட்டார் என்பதைத் தெரிவிக்கும் அருணாசலம், அவர் காஞ்சியில் பல்லவ மன்னர்களால் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்தவரென்றும் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்றும் அவரே **காவ்யாதர்சம்** (கவிதைக்கண்ணாடி) என்ற அலங்கார சாஸ்திரத்தையும் **அவந்தி சுந்தரி** என்ற வசன காவியத்தையும் எழுதியவரென்றும் இலக்கிய விமர்சனத்திற்குக் **காவ்யாதர்சமே** மூலநூல் என்று வடமொழிவாணர் சொல்வாரென்றும் எழுதுவார்.

தண்டி தமிழ் நூலில் கீழ்த்திசை நெறி, தென்திசை நெறி என்று இருபெரும் இலக்கியநெறிகள் உண்டென்றும் அவற்றுள் கீழ்த்திசைநெறி புலமைக்குச் சிறப்பு அளிப்பதென்றும் தென்திசை நெறி உணர்வுக்கும் பாவத்துக்கும் மதிப்பு அளிப்பதென்றும் அவற்றுள் தென்திசை நெறியே பெருமைக்குரியதென்றும் கூறுவார்.

தண்டியின் நூலைத் தழுவியே தமிழில் வீரசோழிய அலங்காரப்படலமும் கன்னடத்தில் கவிராசமார்க்கமும் சிங்களத்தில் சீய பாஸ்லகாரமும் செய்யப்பட்டன என்று அறிஞர் கூறுவர்.

தண்டியலங்காரத்துக்கு முன்னமேயே தமிழில் அணியிலக்கண நூல்கள் இருந்தன என்பதைப் பண்டைய உரைகளால் அறியலாம். தண்டியலங்காரத்துக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த யாப்பருங்கல விருத்தியுரைகாரர் அணியியல் என்ற நூலை ஐந்து இடங்களில் குறிப்பிடுகிறார். நேமிநாத உரையாசிரியர் அணியியலிலிருந்து இரு நூற்பாக்களை இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறார். தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் 108 ஆம் நூற்பாவுரையில் பேராசிரியர் ‘கூறியது கூறல்’ எனும் குற்றம் வர நூல் செய்தமைக்கு மூன்று அணியிலக்கண நூற்பாக்களைச் சான்றுகளாகக் காட்டுவார்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

சொல்லியல் கோட்பாடு

பேரா **செ.வை.சண்முகம்**
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்
கைபேசி : 98651 96476

சென்ற இதழின் தொடர்ச்சி

தமிழில் மொழியியல்

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் (**தொல்காப்பிய மொழியியல்,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1972), மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் (இஸ்ரேல், **The treatment of morphology in Tolkappiyam,** Madurai University, 1973) சென்ற நூற்றாண்டு எழுபதுகளிலிருந்து தொல்காப்பியத்தை மொழியியல் நோக்கில் ஆய்வு செய்து ஓரளவு சாதனை புரிந்துள்ளது (முழு விவரமும் அறியப் பார்க்க, துணையன்கள்). தொல்காப்பியம் தமிழ்மொழி அமைப்பை விளக்கும்போது புலனாகும் மொழியியல் நுட்பங்கள் மேலும் மேலும் தொல்காப்பியத்தை ஆராயத் தூண்டுவதாக அமைகிறது. அதைத் தமிழ் மாணவர்களுக்கு எடுத்துரைத்து அவர்களையும் தொல்காப்பிய மொழியியல் ஆய்வில் ஈடுபடுத்தத் தூண்ட வேண்டும் என்பதற்காகவே இந்தப் பயிலரங்கம் அமைக்கப்பட்டது என்று எண்ணுகிறேன்.

சொல்லியல்

உருபன் – சொல்

மொழியியலில் ஒலியனியல் ஒலியன்களின் தொகை, அவைகளின் மாற்று வடிவம், சொற்களில் அவைகளின் பகிர்வு, அசை ஆகியவைகளையும்; சொல்லியல் சொல்லின் இலக்கணத்தையும் அதாவது சொல்லின் எழுத்து வடிவத்தையும் அவைகளின் மாற்று வடிவத்தையும் (தமிழ் மரபுப்படி புணரியல்), சொல்லின் அடிப்படைக் கூறாக உருபன் (பகாப்பதம்), உருபன் பல வேறு வகைகளையும், சொல்லின் உருபன் அமைப்பையும், சொற்களின் வகைப்பாட்டையும்; தொடரியல் என்பது தொகை, தொடர் வாக்கியம் சொல்லியல் நோக்கில் விளக்கும்.

சொல்லின் அடிப்படைக் கூறு உருபன் (morpheme = நன்னூலாரின் பகாப்பதம்), சொல் (word = நன்னூலாரின் பதம்) உருபன்களால் ஆனது. உருபன் என்பது எழுத்துகளால் ஆக்கப்பட்டு பொருள் உடையது என்று பொருள். சொல்லின் உருபன் அமைப்பை விளக்குவதே சொல்லியல்.

மாற்றுருபுகள்

உருபனின் சொற்களின் எழுத்துகள் மாறுபடும். மரம், மரக் (கிளை), மரப் (மரப்பெட்டி), மர (வேர்) என்பது போல இறுதியில் சிறுமாற்றங்களும், பத்து, பன் (பன்னிரண்டு), பதின் (பதின் மூன்று), பது (இருபது, முப்பது), நூறு (தொண்ணூறு) என்ற அதிக மாறுபாடுகளும் நான், என்(னை) என்ற முழு மாறுபாடுகளும் இயல்பானவையே. அவை ஒரே பொருளை உடையன என்பதால் ஒரு உருபனின் மாற்று வடிவங்களாகவே கருதப்படும். அதற்கு மொழியியலில் மாற்றுருபுகள் (allomorphs) என்று பெயர். ஒரு சொல்லின் மாற்றுருபுகளின் எழுத்து மாற்றங்களை விளக்குவது உருபொலியன் (Morphophoneme, phonemic shapes of the morphemes) என்று பெயர். இலக்கணத்தில் புணரியல் என்பதே அது.

உண்மையில் மொழியியலில் ஆயிரக்கணக்கான சொற்கள் தரவாக அமைவதால் பொருள் ஒற்றுமை உடைய சொற்களை எடுத்துக்கொண்டு உருபுகள் பகுப்பு (segmentation) செய்வது முதல் நிலை. அடுத்து திருப்புரைகளைத் (recurring partial) தொகுத்தல் (grouping), திருப்புரைகளுக்கு அடி நிலைக்கிளவி (Base form) காணுதல் ஆகிய செயல்கள் மேற்கொள்ளப்படும்.

அடிநிலைக்கிளவி

அடிநிலைக்கிளவி அடிப்படையில் மாற்று உருபுகளின் எழுத்து மாற்றங்களைப் பொதுமைப்படுத்தி விளக்குவது உருபொலியன் (morpho phoneme) சுருக்கமாகச் சந்தி என்று அழைக்கப்படுகிறது. அதில் இரண்டு செயல்பாடு அமைந்துள்ளது: i.அடிநிலைக்கிளவி தேர்வு. அது பெரும்பான்மையும் மாற்றுருபுகளில் ஒன்றாக அமையும். சில சமயங்களில் மாற்றுருபாகப் பதியாத ஒரு வடிவத்தைத் தேர்வு செய்தலும் உண்டு. அதற்குக் கற்பித (hypothetical) அடிநிலைக்கிளவி என்று பெயர். தொல்காப்பியமே ஒரு கற்பித அடிநிலைக்கிளவி அமைத்துள்ளது பிற்பகுதியில் காட்டப்படும். ii.அடிநிலைக்கிளவி அடிப்படையில் மாற்றுருபுகளின் எழுத்து மாற்றங்களைப் பொதுமைப்படுத்திப் புணர்ச்சி விதிகளாக விளக்கும். அதுதான் இலக்கணங்களில் புணரியல் என்று விளக்கப்படுகிறது.

படித்தேன் / அழுதேன் / வாழ்ந்தேன் / ஓடினேன் என்பவைகளில் இறந்தகால விகுதி த்த்/த்/ந்த்/இன் என்பவை வடிவ ஒற்றுமை

இல்லாவிட்டாலும் பொருள் ஒற்றுமையால் மாற்றுருபுகள் (allomorphs) ஆகும்.

பொதுவாக அவை அமையும் சூழல் அல்லது நியதியை விளக்க வேண்டும். அது உருபன்நியதி (morphological conditioning) என்று கொண்டு தமிழில் வினைச் சொற்களை 13 வகையாகப் பிரித்து வினையின் மேல் ஒரு எண் சென்னைப்பல்கலைக் கழகப் பேரகராதி (vol 1. p.ixix) கொடுத்துள்ளது.

இங்கு ஒலியன் நியதி (Phonological conditioning) தொடர் நியதி (syntactical conditioning) என்ற முறையிலும் மாற்றுருபுகள் அமையும்.

செய்தேன், உண்டேன் / கண்டேன், நின்றேன் / வென்றேன் முதலியவைகளில் நாமடி ஒலிக்குப் பிறகு (ண்) வல்லின நாமடி விகுதியும், நுனி அண்ண ஒலிக்கு (ன்) வல்லின நுனி அண்ண ஒலியும் (ற்) வருவதாக அமைந்துள்ளது ஒலி நியதி

மரம்~மரங் ~மரஞ்~மரந்~ மரக்~ மரச்~ மரத்~மரப் பொதுவாக மெல்லெழுத்துக்கும் வல்லெழுத்துக்கும் மாறுபாடு தொடர் நிலை என்ற முறையில் அல்வழி / வேற்றுமை என்று தமிழ் இலக்கணம் கூறும். அது தொடரியல் உறவு சம்பந்தமானது. நான் / என்(னை) என்னும் மாற்றுருபு சொல்லியல் நிலையில் வேற்றுமை உருபுக்கு முன் வருவது என்று ஆகும். உண்மையில் மாற்று வடிவங்களின் மாற்றம் பற்றிய விளக்கம் சிக்கலானது. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் மொத்தம் 9 இயல்களில் ஆறு இயல்கள் ஒதுக்கியிருப்பது அதன் சிக்கலின் ஆழத்தைப் புலப்படுத்தும்.

அடிநிலைக்கிளவி என்பது ஒரு உருபன். அப்படிக் காணப்பட்ட உருபன்களைத் தனிநிலை (free) உருபன், கட்டுண்ட (bound) உருபன்கள் என்று பகுக்க வேண்டும். பெயர், வினை ஆகியவை தனிநிலை உருபன்கள், வேற்றுமை உருபு, கால விகுதி போன்றவை கட்டுண்ட உருபன்கள்.

தனிநிலை உருபன்களை அவைகளின் பயன்பாடுகளை ஒட்டிக் குறிப்பாக அவை ஏற்றுவரும் கட்டுண்ட உருபன்களின் அடிப்படையில் பகுப்பது சொல் வகைப்பாடு (parts of speech). வேற்றுமை உருபு ஏற்பது பெயர், கால உருபை ஏற்பது வினை போன்று செய்யப்படும் பாகுபாடே சொல் வகைப்பாடு ஆகும். அதுபோலவே கட்டுண்ட உருபன்களையும் பாகுபடுத்த வேண்டும்.

உருபன் வகை

கட்டுண்ட உருபன்களையும் இரண்டு வகை கண்டறியப்பட்டுள்ளது. i.உட்பிணைப்பு உருபுகள் (inflectional suffixes), ii.ஆக்கஉருபுகள் derivative suffixes). உட்பிணைப்பு உருபுகள், வேற்றுமை உருபு, கால விகுதி ஆகியவை. பெயர்ச்சொற்களில் (தலைவன், தலைவி) பால் விகுதிகள் (வன், வி) வினைச்சொற்களில் (படிப்பு, பாடல், ஓட்டம்) தொழில் பெயர் உருபுகள் (ப்பு, அல், அம்) ஆகியவை ஆக்கஉருபுகள்.

தலை = பெயர்ச்சொல், தலை நிமிர்ந்தது. தலை எழுவாய்; தலையை என்பது செயப்படு பொருள். தலையைச் சீவினான். உண்மையில் பயனிலைத் தொடரின் கூறு. மேலும் தலைவன், தலைவி என்பவையும் பெயர்களே. தலைவன் பார்த்தான், தலைவனைப் பார்த்தான் என்னும்போது தலைவன் எழுவாய், பார்த்தல் அவனுடைய செயல். தலைவனைப் பார்த்தான் என்னும்போது தலைவனை என்பது செயப்படுபொருள் அதாவது பார்த்தல் செயலைச் செய்தது இன்னொருவர். முருகன் தலைவனைப் பார்த்தான் என்பது போல அமையும். தலைவி தலைவனைப் பார்த்தாள், குரங்கு தலைவனைப் பார்த்தது என்பது எழுவாய்க்கு ஏற்ற விகுதி பயனிலையில் அமையும்.

ஆக்க உருபு ஏற்ற பெயர்களும் எல்லா வேற்றுமைகளும் ஏற்று அதன்படி செயல்படும். அந்த அடிப்படையில்தான் வேற்றுமை எண்ணிக்கை அந்த மொழியில் அமையும். அதன் அடிப்படையில் தமிழில் ஏழு வேற்றுமை உடையதாகக் கருதப்படுகிறது.

அது போலவே வினை ஏற்று வரும் கால விகுதிகள் உட்பிணைப்பு உருபுகளே. படி, படித்து என்பது வினையெச்சம். படித்தான் என்ற திணைபால் விகுதி பெறும், அல்லது படித்து முன்னேறு என்று இன்னொரு வினையைத் தழுவும். படிப்பு என்பது பெயராக தொழிற்பெயர் ஆகும். படிப்பு நல்லது, படிப்புக்காக வெளிநாடு சென்றார்.

நடி என்பது நடிப்பு என்பது தொழிற் பெயர் ஆகும். நடிப்பு நன்றாக இருந்தது. -ப்பு விகுதியை எல்லாவினையிலும் சேர்க்க முடியாது. *அடிப்பு, *பார்ப்பு என்ற தொழிற் பெயர்கள் அமையவில்லை. அடி என்பது பெயராகவும் அமையும் (நாலு அடி அடித்தார்), பார்வை என்பதன் பார் என்பது தொழிற்பெயர் ஆகும். தொழிற் பெயர் விகுதிகள் ஒரு ஆக்க உருபு ஆகும்.

உட்பிணைப்பு உருபுகள் சொல்வகைபாட்டையும் நிர்ணயிக்கும். அடியை, அடியால், அடிக்கு என்னும் போது அடி ஒரு பெயர். அடித்தான், அடிக்கிறான், அடிப்பான் என்னும் போது அடி ஒரு வினை. அதில் தொழிற் பெயர் விகுதி இல்லாமல் இருப்பதைச் சொல்லியலில் சூனிய (zero) மாற்றுருபு என்று குறிப்பிடப்படும்.

சொல்லியலில் சூனிய மாற்றுருபு, வெற்றுருபு (empty morph) என்ற இரண்டு வகை குறிப்பிடப்படுகிறது.

வேறு பல சொற்களுக்கு உருபு இருந்து சில சொற்களுக்கு உருபு இல்லாத போது சூனிய மாற்றுருபு அமைந்துள்ளதாகக் கொள்ளமுடியும். மேலே தொழில் பெயர் உருபுகளில் ஒன்றாக சூனிய மாற்றுருபு அமைந்துள்ளது. செய்திலேன், செய்யேன் என்ற இரண்டு சொற்களும் எதிர்மறைப்பொருளை உணர்த்தினாலும் முன்னதில் இல் என்ற எதிர் மறைச்சொல்லே உள்ளது. செய்தேன் என்ற சொல்லோடு ஒப்பிடும்போது ஏன் என்பது தன்மை ஒருமை விகுதி என்று அறியலாம், எனவே செய்யேன் என்பதில் சூனிய மாற்றுருபு அமைந்துள்ளது என்று அறியலாம். அதை /ø/என்ற குறியீட்டால் மொழியியலில் சுட்டப்படும். மாறாக சூனிய மாற்றுருபு என்ற ஒரு வகையும் மொழியியலில் குறிப்பிடப்படுகிறது. தமிழில் சாரியை இந்த வகையைச் சார்ந்தது. மகனை < மகன் +ஐ, மரத்தை <மரம் +த்த் +ஐ என்ற இரண்டும் செயப்படு பொருள் சொற்களே. பின்னதில் கூடுதலாக - த்த் - இருப்பது வெற்று உருபு (empty morph) என்றே குறிப்பிடப்படும். வடிவம் இருந்தாலும் சொல் செயற்பாட்டில் அதற்குப் பங்கு இல்லை.

ஒரு சொல்லின் உட்பிணைப்பு உருபுகள் சேர்ந்து சொல்லடுக்கு (Paradigm) என்று சொல்லியலில் குறிப்பிடப்படும். ஒரு பெயர்ச்சொல், அதன் எல்லா வேற்றுமை உருபு ஏற்ற சொற்களும் ஒரு சொல்லடுக்கு ஆகும். வினையில் கால விகுதிகள், திணைபால் விகுதிகள் சேர்ந்த ஒரு வினையின் எல்லா வடிவங்களும் ஒரு சொல்லடுக்கு ஆகும்.

திணைபால் விகுதிகளில் படிநிலை அமைப்பு அமைந்துள்ளது. மொழி கருத்தாடல் என்ற இடம் அதாவது தன்மை (பேசுவோர்), முன்னிலை (கேட்போர்), பேசப்படுவோர் / பேசப்படுவது படர்க்கை என்ற பாகுபாடு எல்லா மொழியிலும் உண்டு. அவைகளில் பால் வேறுபாடு மொழிக்கு மொழி வேறுபடும். தமிழில் தன்மையும் முன்னிலையும் எண் வேறுபாடு அதாவது ஒருமை / பன்மை வேறுபாடு மட்டும் உண்டு. படர்க்கையில் உயர்திணை (மனிதர்) அஃறிணை (மனிதர் அல்லாதவை)

என்று வேறுபாடு செய்யப்படுகிறது. இலக்கணப்படி உயர்திணை ஒருமையில் ஆண்பால் / பெண்பால் (அவன் / அவள்) பன்மையில் பால் வேறுபாடு இல்லாமலும் (அவர்) அமைய அஃறிணையில் எண் வேறுபாடு மட்டும் அதாவது ஒருமை (அது) பன்மை (அவை) என்ற வேறுபாடு மட்டும் அமைந்துள்ளது. அதாவது திணைபால் பாகுபாட்டில் படிநிலை (hierarchy) அமைந்துள்ளதாக ஆகிறது.

சொல் வகைப்பாட்டின் உருபன் அமைப்பு

பெயர் + (பால் விகுதி) + (பன்மைஉருபு) + சாரியை + வேற்றுமை

நிலம், நிலங்கள், நிலத்தை, நிலங்களை / மரம், மரங்கள், மரத்தை, மரங்களை, தலையை, தலைவனை, தலைவரை

அது அவை, அதனை, அவற்றை

வினை + காலம் + திணைபால் உருபு.

செய்தார்

வினை + ஏவல் / வியங்கோள்

செய்மின், செய்க

உண்மையில் இன்னும் சிக்கல் நிறைந்த அமைப்பு உடையவை.

சொல்லியல் நோக்கில் உலக மொழிகள்

உலக மொழிகளைச் சொல்லியல் பண்பின் அடிப்படையில் தனிநிலை (isolation) மொழி, ஒட்டுநிலை (Aggultinative) மொழி, உட்பிணைப்பு (Inflectional) என்று மொழியியலில் மூன்று பெரும்பிரிவாகப் பிரிக்கப்படுகிறது. வியட்நாமீஸ், ஒரு தனிநிலை மொழி, தமிழ் உட்பட தற்கால இந்திய மொழிகள், துருக்கி மொழி ஒட்டுநிலை மொழி, லத்தீன் மொழி, இவை பெரும்பான்மை இயல்பு அடிப்படையில் அமைந்தது. எல்லா மொழியிலும் அதன் பெரும்பான்மை பண்பு அடிப்படையில் பாகுபாடு செய்யப்படுகிறது. அதாவது அதன் பெரும்பான்மை பண்பு பிற வகைப் பண்புகளும் சில கூறுகள் அமைந்திருக்கும். தமிழ் ஒட்டுநிலை ஆனாலும் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவை உருபன்களைப் பகுத்து விளக்கமுடியாது.

தொல்காப்பியம்

பொது மொழியியல்

தொல்காப்பியத்தின் மொழியியல்கோட்பாடு ஆழமானது. அதில் மொழி பற்றிய பொது சிந்தனையும் அமைந்துள்ளது சிறப்பானது, அறியத்தகுந்தது.

நில பரப்பு

1. மொழி ஒரு நில பரப்பு (geographical area) உடையது. இன்றைய சூழலில் தமிழ்மொழி தமிழ்நாட்டில் பெருவாரியாகப் பேசப்படுகிறது என்று சொல்லலாம். தமிழ்நாடு என்ற பெயரே அதன் மொழி அடிப்படையில் அமைந்தது. ஆனால் கேரளாவில் மலையாள மொழியும் கருநாடகாவில் கன்னடமும் உத்திரபிரதேசத்தில் இந்தியும் பேசப்படுகிறது. மாநிலம் பெரும்பான்மையாகப் பேசும் மொழியால் அடையாளப்படுத்தலாம்.

பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே
அங்கதம், முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில்
நாற்பேர் அகத்தவர் வழங்கும்
யாப்பு வழியது என்மனார் புலவர் (செய்.75)

என்று தொல்காப்பியம் மொழியின் பல வகைப் பயன்பாட்டையும் மொழி வழங்கும் நிலப் பகுதியை அரசு நோக்கிலும் விளக்குகிறது. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில், நாற்பேர் அகத்தவர் வழங்கும் யாப்பு' என்பது சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று அரசர்கள் ஆளும் நாட்டவர் மக்கள் வழங்கும் மொழி என்று பொருள். 'செந்தமிழ் நிலத்து வழக்கு' (எச்சம்.2) 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' (எச்சம் 4) என்றும் பிற இடங்களில் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பிய பாயிரம் நேரடியாகவே 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம்' என்று தமிழின் நிலவியல் அமைப்பை விளக்குகிறது.

3) பல திற மக்கள் பரந்த நில பரப்பில் வாழும் மக்கள் பேசும் பேச்சு என்பதை மொழி கட்டமைப்பு (Structure) உடையதோடு பல மாறுபாடுகளை உடையது. இருந்தாலும் மொழி கட்டமைப்பில் ஒழுங்கமைவு (pattern) இருப்பதால் மொழி அமைப்பை இலக்கணப்படுத்த முடிகிறது.

மொழி அமைப்பு மாறுபாடு உறழ்ச்சி என்று இலக்கணத்தில் குறிப்பிடப்படும். 'உறழத் தோன்றும்' (தொகை மரபு.14) மயக்கம் உடையது ('மயங்குதல்' மொழி மரபு.49) தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. மொழியியலில் கட்டற்ற மாற்றம் (free variations) என்று குறிப்பிடப்படும். ஆனால் அதைச் சமூக மொழியியலார் ஏற்றுக்கொள்வது இல்லை. சமூக நிலை, பேச்சுச்சூழல் போன்ற பல காரணங்கள் உறழ்ச்சிக்கு இருக்கலாம் என்பது அவர்கள் கருத்து.

தொடர்ச்சி அடுத்த இதழில்

தமிழ் இலக்கண இலக்கியத்தில் ஒட்டகம்

பேரா முனைவர் **இ.கி.இராமசாமி**
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
தமிழ் உயராய்வு மையம்,
யாதவர் ஆடவர் கல்லூரி,
மதுரை - 17
கைபேசி : 9842008954

1.1.அறிமுகம்

ஒட்டகம் பற்றிச் சங்கப்புலவர்களும் தொல்காப்பியரும் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். விலங்கு நூலார் இலைதழைகளைத் தின்னும் வீட்டு விலங்கு ஒட்டகம் என்று கூறுகின்றனர். ஆனால் இறைச்சி உண்ணும் ஒட்டகம் பற்றிய தகவல் அகநானூற்றில் காணப்படுகின்றது. அதுவும் எலும்புகளைத் தின்னும் ஒட்டகம் குறித்த தகவல் சிந்திக்கத் தூண்டுகிறது.

'இருள் நீங்கி விடியல் வந்தது; இலவ மரத்தில் தீயைப் போன்று
ஒள்ளிய மலர்கள் மலர்ந்தன. அவற்றை வண்டுகள்
மொய்த்தன. அங்குப் பாறையின்மீது சுள்ளிகளைப் போல
வெண்மையான எலும்புகள் கிடந்தன. தன் பசியைப் போக்க
அந்த எலும்புகளை ஒட்டகம் தின்றது.'

இந்தப் பொருளில் அமைந்த பாடல் வருமாறு:

"*அருமுனைப் பாக்கத்து அல்கி வைகுற*
நிழல்படக் கவின்ற நீள்அரை இலவத்து
அழல் அகைந்தன்ன அலங்குசினை ஒண்பூக்
குழல் இசைத்தும்பி ஆர்க்கும் ஆங்கண்
குறும்பொறை உணங்கும் ததர் வெள்என்பு
கடுங்கால் ஒட்டகத்து அல்குபசி தீர்க்கும்..." *(அகநா.245)*

ஒட்டகத்தின் உடலமைப்பில் கால்கள் இரண்டு மடக்கு உடையவை. அது திண்மையான வலிமையான உறுப்பு ஆகும். அடுத்து அதன் பெரிய திமில் பகுதி வியப்பூட்டுவதாகும். ஒட்டிய வயிற்றை உடைய விலங்காதலால் அதனை ஒட்டகம் என்று தமிழர்கள் அழைத்தனர்;

அழைக்கின்றனர். அது தூய தீந்தமிழ்ச் சொல்லாகும். ஒட்டகம் இலைதழைகளைத் தின்னும் பழக்கமுடையது. ஆனால் தேவை ஏற்படின் எலும்புகளையும் தின்னும் என்ற தகவலை கூகுள் வழியும் (https://a-z animals.com) அறிய முடிந்தது.

1.2 அறிவியல் பார்வை

அறிவியல் கண்ணோட்டத்தில் சங்க இலக்கிய விலங்குகள் என்ற நூலில் அதன் ஆசிரியர் இரா.வசந்தகுமார் சங்க இலக்கியத்தில் அதிகம் இடம்பெறாத விலங்குகள் என்ற பட்டியலில் ஒட்டகத்தை வைத்துள்ளார். பாலைநில விலங்கான ஒட்டகம் தமிழகத்தில் அதிகம் காணப்பட வாய்ப்பில்லை என்றும் கருதுகின்றார். என்றாலும் ஒட்டகம் பற்றிச் சங்ககால மக்கள் எப்படியோ தெரிந்து வைத்திருந்தனர் என்றும் குறிப்பிடுகின்றார். ஒட்டகத்தின் காலினைக் **கடுங்கால்** என்று சுட்டி அது எலும்புகளைத் தின்று பசியாற்றிக் கொண்டதைக் கூர்ந்து பார்த்துப் பாடிய புலவர் எப்படியோ ஒட்டகத்தைப் பற்றித் தெரிந்துகொண்டவரா? இல்லை. அக்காட்சியை நேரில் கண்டவர் ஒரு விலங்கு, இலக்கியத்தில் அதிகம். பேசப்பட்டதா? இல்லையா? என்பதல்ல இங்குச் சிக்கல்! தமிழ் நூற்பரப்பில் அந்த விலங்கு சுட்டப்பட்டதா? என்றுதான் பார்க்க வேண்டும். ஆம். ஒட்டகம் பற்றிய தெளிவான பதிவு உள்ளது.

மேலே காட்டிய பாட்டின் நிலமுதற் பொருள் காடு. அது பாலைநிலப்பகுதிதான். அதன் உரிப்பொருள் - பொருட்பிரிவு. ‘என் உள்ளம் அந்தப் பாலைநில வழியாகச் செல்லட்டும், என்னுடல் அங்குப் போகாது’ என்று தலைவன் பேசுகின்றான். பொருட்பிரிவின் பின்னணியாகப் பாலைநிலம் அங்கு அமைகின்றது. பாலைக்குத் தனிநிலம் இல்லை என்பதும் அது தற்காலிக கால நிலச் சூழல் என்பதும் அறியப்பட்ட செய்திகளாகும். ஆயினும் ஐந்து நிலவளமும் உடைய பழைய நெல்லை மாவட்டத்தை அறிந்தோர் பாலைநிலம் தற்காலிக நிலம் என்று சொல்லமாட்டார்கள். கடற்கரையை ஒட்டியுள்ள நிலப்பகுதி செம்மண்தேரியாகும். குலசேகரப்பட்டினம், சாத்தான்குளம், திசையன்விளை, இராதாபுரம் வட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். யுரேனியத் தாதுவை எடுக்க அந்த மணல் கடத்தப்படுகின்றது. அப்பகுதி ஒட்டகம் வாழ்வதற்குரிய இடமாகலாம். அந்த விலங்கின் பராமரிப்புச் செலவையும் பயன்பாட்டையும் கொண்டு அந்த விலங்கைத் தமிழர் தவிர்த்திருக்கலாம்.

1.3 உவமைப் பொருளாக ஒட்டகம்

ஒய்மாநாட்டு நல்லியக்கோடனைப் பாடவந்த நல்லூர் நத்தத்தனார் நெய்தல் நிலத்திலுள்ள எயிற்பட்டினத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைமுறையினையும் சமையல்முறையினையும் விளக்குகின்றார். கடல் அலைகளால் கொண்டுவந்து ஒதுக்கப்பட்ட அகில்மர விறகினை எடுத்து நெருப்பினை மூட்டி நுளைச்சியர் சமைப்பர் என்ற செய்தியைச் சொல்லுகின்றார். கடல் அலைகள் உயர்ந்தும் தாழ்ந்தும் வருகின்ற காட்சியை ஒட்டகம் உறங்குவது போல இருந்தது என்று சித்திரிக்கின்றார்.

"ஓங்குநிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகு..." (சிறுபாண்.154-155)

ஒட்டகம் இப்படித்தான் படுத்திருக்கும் என்பதைப் பார்த்துப் பழகியவர் நத்தத்தனார் என்ற உண்மை இதனால் விளங்கும். ஒட்டகம் சுமைதூக்கப் பயன்பட்ட விலங்கு. விறகுக்கட்டைகளைக் கொணர்ந்து கரையில் ஒதுக்குகின்ற கடல் அலை. வடிவமும் பயனும் ஒத்த உவமையாக இது இலங்குகின்றது. ஒட்டகத்தோடு வாழ்ந்த அல்லது ஒட்டகம் வாழ்ந்த இடத்தில் வாழ்ந்த அனுபவம் அந்தப் புலவருக்கு இருந்திருக்க வேண்டும். ஒட்டகத்தை வீட்டுவிலங்காக வைத்துப் பழக்கிப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது. ஒட்டகத்தைவிட எளிதாகப் பராமரிக்கக்கூடிய விலங்குகள் தமிழ்மண்ணில் கிடைத்தமையால் அதனை விட்டுவிட்டனர். இன்றும் வட்டக்காட்சி (CIRCUS)யில் ஒட்டகத்தைப் பார்க்கின்றோம். மதுரைத் திருப்பாலையில் ஒருவர் ஒட்டகத்தை வளர்த்து விழாக்களுக்கு வாடகைக்கு விட்டு வருகின்றார்.

1.4. மரபியலில் ஒட்டகம்

இதுகாறும் ஒட்டகம் பற்றிச் சங்க இலக்கியம் தருகின்ற தகவல்களைக் கண்டோம். எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்திலிருந்து எடுக்கப்படுவது இலக்கணம். ஒட்டகம் பற்றி வலிமையான இலக்கணச் சான்றுகள் உள்ளன. அதுவும் தொல்காப்பிய மரபியலில் இரண்டு நூற்பாக்களில் ஒட்டகம் பற்றிய தகவல் காணப்படுகின்றது. ஒட்டகம் ஈனுவது **'கன்று'**; ஒட்டகத்திற்குப் பெண்பால் பெயர் **'பெட்டை'** என்று மரபிலக்கணத்தில் வகுத்துக் காட்டப்பட்டுள்ளது. இன்றைய புதுமை நாளைய மரபு. முன்னோரும் உயர்ந்தோரும் ஒரு பொருளை எப்படிக் குறித்தனரோ அப்படிக் குறிப்பது மரபு.

அப்படியானால் பலகாலம் தமிழ்மக்கள் வாழ்வோடு தொடர்புடைய ஒரு விலங்குதான் ஒட்டகம் என்பது உறுதியாகின்றது. தொல்காப்பிய மரபியலில் அதன் பெயர் இரண்டு இடங்களில் வருவதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

"யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்
ஆனோடு ஐந்தும் **கன்று** எனற்கு உரிய" (தொல்.1514)

"**ஒட்டகம்** அவற்றோடு ஒருவழி நிலையும்" (தொல்.1517)

ஒட்டகம் குதிரை கழுதை மரை இவை
பெட்டை என்னும் பெயர்க்கொடைக்கு உரிய" (தொல்.1552)

தமிழ்மொழியை, தமிழ் இலக்கியத்தை, தமிழ்ப்பண்பாட்டைக் காக்கின்ற தமிழ்க்காப்பு இலக்கணமாகிய தொல்காப்பியம் பற்றிய பயிலரங்கில் பேசும் அறிஞர்கள் சிலர் **ஒட்டகம்** பற்றிய செய்தி சங்கஇலக்கியங்களில் இல்லவே இல்லை என்று சொல்லிச் செல்கின்றனர். இதுபோலக் கருத்துப்பிழை செய்யாமல் தமிழுலகம் உண்மையினைத் தெளிவார்களாக! செந்தமிழ் இதழை மாணவர்கள் நுண்ணிதின் உணர்ந்து படித்துப் பயன் கொள்வார்களாக!

1.5 பின்புலமாகிய வரலாற்றுச் செய்திகள்

வடக்கே இமயமலையும் தெற்கே குமரிமுனையும் பழந்தமிழகத்தின் எல்லைகளாக இருந்தன. அதற்கு வரலாற்றுச் சான்றுகளும் ஆராய்ச்சி முடிவுகளும் காட்ட முடியும்:

"வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி" (சிலப்.காடுகாண்.21-22)

என்ற வரிகள் பழைய பாண்டியநாட்டின் நிலப்பரப்பினையும் ஆட்சிப்பரப்பினையும் குறிக்கின்றன.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வடஆரியரை வென்ற செய்தியும் அவன் மகன் சேரன் செங்குட்டுவன் கனகவிசயரை வென்று இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்து தமிழகத்திற்குக் கொண்டு வந்து கண்ணகிகோட்டம் அமைத்தான் என்ற செய்தியும் பதிற்றுப்பத்துள்ளும் சிலப்பதிகாரத்துள்ளும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

“வடவர் உட்கும் வான்தோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்
கடவுள் பத்தினிக் கல்கோள் வேண்டிக்
கான்நவில் கானம் கணையின் போகி,
ஆரிய அண்ணலை வீட்டிப் பேர்இசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி”

(பதிற்.5ஆம் பத்து, பதிகம், அடிகள்:1-7)

இந்த வரலாற்றுச் செய்திகள் எதனைக் காட்டுகின்றன? தமிழ்வேந்தர்கள் வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது அவரோடு துணையாகச் சென்ற பிற பணியாளர்கள் அங்குள்ள விலங்குகளைக் கண்டிருப்பர்; அவற்றோடு பழகியிருப்பர்; அவற்றுள் ஒரு விலங்கு ஒட்டகம் என்பதை உய்த்துணர வைக்கின்றன. நிலவியல் அறிந்தவர்களுக்கு அங்கு அவர்கள் கண்டு, பழகிய விலங்குகள் பற்றியும் நன்றாகத் தெரிந்திருக்கும். இயல்பாகவே நிலவியலும் உயிரினங்களும் பற்றிய கூர்த்த மதியுடையவர் தமிழர்.

1.6 கல்வி கேள்வி

ஒட்டகம் பற்றிய பிறர் வாய்வழியாகவும், பிறர் செய்த நூல் வழியாகவும் கேட்டு அறிந்துகொள்ளும் வாய்ப்பையும் அறிவர். அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. இது செம்மையான கருதுகோள் (Refined hypothesis) ஆகும்.

1.7 தொல்லியல் சான்றுகள்

சிந்து சமவெளி நாகரிகத்தைத் தமிழர் நாகரிகம் என்று ஈராஸ் பாதிரியாரும், ஐராவதம் மகாதேவன் இ.ஆ.ப.அவர்களும், ரெ.பாலகிருட்டினன் இ.ஆ.ப. அவர்களும் மெய்ப்பித்துள்ளனர். தொல்லியல் மற்றும் மானுடவியல் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் அறிவியல் பார்வையோடு அவர்கள் பழந்தமிழ் நிலப்பரப்பை உறுதிப்படுத்தியுள்ளனர். இப்பொழுது இருக்கின்ற இந்திய நிலப்பரப்புக்கு அப்பாலும் தமிழர் வாழ்ந்தனர் என்பது உண்மை. அந்த வாய்ப்பினைப் பெற்ற தமிழர் ஒட்டகம் பற்றி நன்கு அறிந்திருந்தனர். அதனால் அவ்விலங்கினைப் பற்றி இலக்கண இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர்.

கல்வெட்டில் 'கல்வி'

முனைவர் **பி.ஆறுமுகம்**
எம்.ஏ.,எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 1
கைபேசி : 87783 23112

முன்னுரை

ஆதி மனிதன் மிருகத்தை வேட்டையாடி அதன் மாமிசத்தை சமைக்காமல் உண்டான். அடுத்த நிலையில் வேட்டையாடிய மாமிசத்தை சமைத்து உண்டான். அதற்கும் அடுத்த நிலையில் விவசாயம் செய்து தானியங்களைச் சமைத்து உண்டான். இவ்வாறு பசியைப் போக்கிக் கொண்ட மனிதன் அதற்கும் அடுத்த நிலையில் பண்பாட்டை வளர்க்கப் பாறையைக் குடைந்து கோயில் கட்டினான். கல்லிலே கலைவண்ணம் கண்டான். இதனால் பாறையில் சரசுவதி தெய்வம், கல்லூரி, பள்ளி, மாணவர், ஆசிரியர், புத்தகம், நூலகம் போன்ற கல்வி சார்ந்த விசயங்கள் ஆவணமாகிவிட்டன. அவற்றை ஆராய்ந்து வெளிக்கொணர்வது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வெட்டில் 'சரசுவதி தெய்வம்'

சரசுவதி என்ற தெய்வம் கல்விக்குரிய கலைமகள் தெய்வம் (The Goddess of Learning) ஆகும். 'இத்தெய்வத்திற்கு நாகை மாவட்டம் திருவாரூர் செல்லும் வழியில் கூத்தனூரில், தனி ஆலயம் உள்ளது. நவராத்திரி விழாவில், கடைசி நாளில், சரசுவதிக்குப் பூசை செய்வது மரபாகும். ஒட்டக்கூத்தர் சரசுவதி தெய்வத்தை வேண்டி நலம் பெற்றார்'[1] என்பர். ஞானத்தில் சிறந்த துறவிகளுக்குச் 'சரசுவதி' என்ற பட்டம் கொடுத்துக் கௌரவிப்பர்.'[2] இத்தெய்வம் கல்வெட்டுக்களில் 'கலைவஞ்சி'[3] எனக் குறிக்கப்பெறுகிறது. 'வஞ்சி என்பதற்குப் பெண் என்ற பொருள்'[4] உண்டு.

கல்வெட்டில் 'கல்விக்கொடை'

கொடை என்பதற்கு 'ஈதம், ஈதல், தியாகம், உதவிப்பொருள்'[5] எனப் பல பெயர்கள் உள்ளன. அக்காலத்தில் பத்தாயிரம் மாணவர்களுக்கு

உணவு முதலியன கொடை கொடுத்துக் கல்வி கற்பித்தவன் 'குலபதி'[6] எனப்பட்டான். 'கல்விக்கொடை செய்பவனுக்கு அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்'[7] என்று சோதிடம் கூறுகிறது. 'கல்வி பயிலும் இடத்தைக் கல்வெட்டுகள் 'சாலை'[8] என்கிறது. கல்வி கற்க வசதியாகக் கட்டிடம் கட்டிக் கொடுத்தவன் 'சாலை செய்தான்'[9] என்றும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டான். 'கல்விச்சாலைகட்கும் அறச்சாலைகட்கும் அளிக்கப்பெறும் இறையிலிநிலம் 'சாலாபோகம்'[10] எனவும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. 'பல்லவர்கள் செப்பேடுகள் கல்விக் கொடைகளை 'வித்யாபோகம்'[11] என்கின்றன. ஆசிரியர் அல்லது குருவுக்காக அளிக்கப்படும் நிலக்கொடை 'ஆச்சார்ய போகம்'[12] எனவும், நடன ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடை 'நட்டுவக்காணி'[13] என்றும் குறிக்கின்றன.

கல்வெட்டில் 'ஆசிரியர்'

நல்லாசிரியர் ஒருவர் ஆயிரம் நூல்களுக்கும் மேலானவர் (A Good teacher is better than thousand books) ஆவார். 'ஆறாம் அறிவை ஏழாம் நிலைக்கு உயர்த்தும் எட்டாம் அதிசயம் ஆசிரியர்'[14] என்பர். ஆசிரியர் என்பதற்குச் சட்டம்பி (வடமொழி ஆசிரியர்) அண்ணாவி (சிலம்பம், ஒயிலாட்டம் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்), போதகர் (சமயகுரு), புலவர், கணக்காயர் (தமிழ் இலக்கிய ஆசிரியர்கள்), குரவன் (சமண ஆசிரியர்), பரமாச்சாரியார் (குரு), நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிக்கையாசிரியர், தொகுப்பாசிரியர், பேராசிரியர், உதவி, இணை, துணையாசிரியர்கள், வாத்தியார், தகைசால் பேராசிரியர் (பணிநிறைவு பெற்ற ஆசிரியர்), படாரர் (சமணத் தீர்த்தங்கரராசிரியர்), மதிப்புறு ஆசிரியர் என்ற பல பெயர்கள் உண்டு.

இவ்வாசிரியர்களை 1. ஏணி (பலரை ஏற்றிவிடுவது), 2. தோணி (பலரைக் கரை சேர்ப்பது), 3. மெழுகுவர்த்தி (தன்னை உருக்கிப் பிறருக்கு வெளிச்சத்தைக் கொடுப்பது), 4. நார்த்தங்காய் (தான் செரிக்காவிட்டாலும் உண்ட சோற்றைச் செரிக்க வைப்பது) ஆகியவற்றோடு ஒப்பிடுவர். 'ஆசிரியர்கள் மாணவர்களிடம் அகலாது அணுகாது தீக்காய்வார் போல இருக்க வேண்டும்'[15] என்பர். கண்டிப்பான ஆசிரியரின் 'கை' கட்டப்படும்போது, வருங்காலக் குற்றவாளியின் 'கை' அவிழ்க்கப்படுகிறது... சமுதாயத்தின் நம்பிக் 'கை' வெட்டப்படுகிறது'[16]

என்ற கருத்தும் உண்டு. ஆசிரியர்கள் கல்வெட்டில் குறிக்கப்படும் விதம் பற்றிப் பின்வருமாறு காணலாம்.

பாலாசிரியன்

பாலர்களுக்கு (சிறுவர்களுக்குக்) கற்றுக்கொடுக்கும் ஆசிரியன் கல்வெட்டுக்களில் 'பாலாசிரியன்' என்று குறிக்கப்பட்டான். இவ்வகை ஆசிரியன் "இவ்வூர் பாலாசிரியன்", "மதுரைப் பாலாசிரியன் என்றெல்லாம் ஆவணப்படுத்தப்பட்டான். அகநானூற்றில் 92ஆவது பாடலிலும் 'பாலாசிரியன்'[17] சுட்டப்படுகிறான். இவற்றை உற்று நோக்கும்போது அக்காலத்தில் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு பாலாசிரியன் இருந்தான் என்பது புலனாகிறது.

வாத்தியார்

'நாடகம், கூத்து கற்றுக் கொடுக்கும் ஆசிரியன் வாத்தியார்'"[18] என அழைக்கப்பட்டான். மதுரையில் உள்ள செல்லூரில் ஒரு சிறப்பான வாத்தியார் இருந்தார் என்பதை 'செல்லூர் காம சிற்றான் வாத்தி' என்று தேனூர் மண்டபக் கல்வெட்டு'[19] குறிக்கிறது. மதுரை அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் கோயில் அருகேயுள்ள நாடக நடிகர் சங்கத்திலும், அருள்மிகு மதன கோபாலசுவாமி கோயிலிலும் மாணவர்கள் அவர்களின் நாடக வாத்தியார்களை வணங்கும் குரு பூசையை ஆண்டுதோறும் நடத்துகிறார்கள் என்பதை ஆய்வாளர் நேரில் காண முடிந்தது'[20]

உபாத்தியாயர்

வேதம் ஓதும் ஆசிரியர் கல்வெட்டில் 'உபாத்தியாயர்' எனக் குறிக்கப்படுகிறார். இதை,

> ***"வேதாத்யானம் பண்ணுவிக்கும்***
> ***உபாத்தியாயனுக்கு, வேத விருத்தியாக..."***[21]

என்ற கல்வெட்டுச் செய்தியால் அறியலாம்.

நட்டவனார்

நாட்டிய ஆசிரியர் 'நட்டவனார்' என்றும், இக்கலையில் வல்ல ஆசிரியர் 'நிருத்தமாராயன்' எனவும் அழைக்கப்பட்டார். இதை,

> ***"நட்டவன் ஒன்றுக்கு அரையன் சுந்தர சோழனான***
> ***மும்முடி சோழ நிருத்த மாராயனுக்கு"***[22]

என்ற கல்வெட்டு உணர்த்துகிறது.

நிருத்தப் பேரரையன்

தென்னிந்தியாவில் புகழ்பெற்ற கலை பரதக்கலை ஆகும். பரதத்தின் வழி கதையைக் கூட விளக்கலாம். இப்பரத நாட்டியத்தைக் கற்பிக்கும் ஆசிரியன் 'நிருத்தப் பேரரையன்' எனப்பட்டான். இதை,

"சோழ நிருத்த பேரரையன் விலை கொண்டு"[23]

என்ற கல்வெட்டால் அறியலாம்.

கானபாடி

பாடலைக் கற்பிக்கும் ஆசிரியன் 'கானபாடி' எனப்பட்டான். இதை,

"கானபாடி மூவர்க்கு முண்டதாரி அணுக்கனுக்கு"[24]

என்ற தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டால் அறியலாம்.

ஆசார்யன்

வேதங்களையும் சாத்திரங்களையும் குற்றமில்லாமல் (பழுதறக்) கற்று, பிறருக்கும் கற்பிப்பவர் 'ஆசார்யன்' எனக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. ஆசு என்றால் குற்றம்; இரியர் என்றால் களைபவர்கள் என்று பொருள் ஆகும். மாணவர்களின் குற்றங்களைக் களைபவர்கள் பின்நாளில் ஆசிரியர்கள் எனப்பட்டனர். இக்கருத்திற்குச் சான்றாக,

"வேத வேதாந்தங்களும் விவித சாஸ்திரங்களும்
தன்னோடு பிறரோதிக் கேட்டுணர்வெய்த
உரைக்கும் ஆசார்யன்"[25]

என்ற கல்வெட்டு உள்ளது.

கல்வெட்டில் 'புத்தகம்'

புத்தகம் என்பது 'கருத்துக்கள் உறங்கும் காகிதப்படுக்கை' என்பார் நா.காமராசன். நாம் தூங்க வேண்டும் என்பதற்காகப் புத்தகம் எடுத்துப் படிக்கும்பொழுது, நம்மைத் தூங்கவிடாமல் படிக்கச் செய்கிற புத்தகம் நல்ல புத்தகம்'[26] என்பர். 'படிக்கிற காலங்களில் நல்ல புத்தகங்களை நாம் சுமந்தால் எதிர்காலத்தில் அந்த நல்ல புத்தகங்கள் நம் வாழ்க்கையைச் சுமக்கும்'[27] என்பது பழமொழியாகும்.

புத்தகம் என்ற கலைச்சொல் கல்வெட்டிலிருந்து வந்ததுபோல் தோன்றுகிறது. 'போத்து என்றால் பனை குருத்து ஆகும். அதேபோல் தாலம் என்றாலும் பனை ஓலையைக் குறிப்பதாகும். எழுத்துக்களுடன் அமைந்த பனையோலை தாலப் போத்தகம் என்றும் பனையோலை பொத்தகம் என்றும் ஆகியது.[28] பின்நாளில் அவை, பண்டாரங்களில்

(கருவூலங்களில்) வைக்கப்பட்டதால் 'பண்டாரப் பொத்தகமாகியது'. இதை,

"ஆதி ராஜ ராஜ மூவேந்த வேளாண்... பண்டாரப் பொத்தகத்து"[29]

என்ற கல்வெட்டால் அறியலாம். 'மதுரை மீனாட்சியம்மன் கோயில் வரலாறு தாலப் பொத்தகத்திலிருந்துதான் எடுத்து எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது இது சீதாலப் புத்தகம் எனப்படுகிறது. இதை மீனாட்சியம்மன் கோயில் அர்ச்சகர் ஒருவர் வைத்திருந்ததை ஆய்வாளர் நேரில் காண முடிந்தது.'[30]

வழக்கத்தில் ஓலையில் இருந்த பண்டாரப் பொத்தகம், சீதாலப் பொத்தகம் ஐரோப்பியர் வரவுக்குப்பின் தாளால் ஆன 'புத்தகம்' என்றாகியது. ஐரோப்பியர்தான் ஓலைச் சுவடிகளில் இருந்த பல நூல்களை அச்சேற்றினர்'[31] என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டில் 'நூலகம்'

அக்காலத்தில் கோயில்களிலும் அரண்மனைகளிலும் பொருட்கள் வைக்கும் அறைகள் இருந்தன. இவைகள் பண்டாரங்கள் என்று அழைக்கப்பட்டு வந்தன. இப்பண்டாரங்கள் மூலப்பண்டாரங்கள் என்றும் சரஸ்வதிப் பண்டாரங்கள் என்றும் இரு பிரிவுகளாகப் பெயரிட்டு அழைக்கப்பட்டன. சோழர்கால மூலப்பண்டாரங்களில் 'தங்கம், மணிகள், ரத்தினங்கள் ஆகிய விலையுயர்ந்த பொருட்கள் வைக்கப்பட்டன.'[32] இம்மூலப்பண்டாரங்கள்தான் பின்நாளில் மாவட்டக் கருவூலங்களாகின எனலாம். 'பாண்டியர் கால கணக்குப் பொத்தகம் வைக்கும் அறை 'சரஸ்வதிப் பண்டாரம்' என்று அழைக்கப்பட்டது என்பதற்குச் சேரன்மாதேவி கல்வெட்டில்'[33] சான்று உள்ளது. சரஸ்வதிப் பண்டாரம் பின்நாளில் சரஸ்வதி நூலகம், சென்னை சுவடி நூலகம், மாவட்ட மைய நூலகம், கல்லூரி நூலகம் என்றாகின எனலாம். தஞ்சையில் சரபோஜி மன்னரால் துவங்கப்பட்ட நூலகம் இன்றும் 'சரஸ்வதி மகால் நூலகம்'[34] என்றே வழங்கப்படுகிறது. மேலும் 'மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் நூலகம் உலகப் பிரசித்தி பெற்ற நூலகம் ஆகும். இந்நூலகம் தமிழ் ஆய்வு மாணவர்களுக்கும் தமிழ்மொழி பயில்வார்க்கும் சிறந்த கலைப்பெட்டகமாகத் திகழ்கிறதென்றால் அது மிகையாகாது. இந்நூலகம் 'பாண்டியன் நூலகம்' என்றும் 'சரஸ்வதி நூலகம்' என்றும் இன்றும் பெயரிட்டு அழைக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலகத்தில் இன்றும் சுமார் 200 ஓலைச் சுவடிகளும் 50,000த்திற்கு

மேற்பட்ட நூல்களும் உள்ளன. இந்த நூலகம் சரஸ்வதியின் பெட்டகமாகத் திகழ்ந்ததால்தான் மதுரை நான்காம் தமிழ்ச்சங்க முத்திரை சரஸ்வதி முத்திரையாகத் தேர்ந்தெடுத்தார்கள்'[35] எனலாம். இச்செய்தி மேற்கூறிய செய்திக்கு வலுச் சேர்ப்பதாக அமைகிறது.'

கல்வெட்டில் 'மாணவர்'

வடமொழி கற்ற மாணவர்கள் அக்காலத்தில் 'சட்டர்' என அழைக்கப்பட்டனர். இதைக் கல்வெட்டுக்கள்,

"காந்தளூர் மர்யாதியால் தொண்ணூற்று
ஐவர் சட்டர்க்கு (வடமொழிக் கல்வி மாணவர்க்கு)
சாலையும் செய்தான் ஸ்ரீ கோக்கருந்தடக்கன்'[36]

என்கின்றன. சட்டாம்பிள்ளை (பள்ளிக்கூட வகுப்பில் தலைமையேற்கும் மாணவன்) என்ற கலைச்சொல்கூட இந்தச் 'சட்டர்' என்ற வார்த்தையிலிருந்து வந்திருக்க வேண்டும்.

சரணத்தார்

வேதாகமச் சாலையில் பயிலும் பிராமண மாணவர் சரணத்தார் என அழைக்கப்பட்டனர். இதை,

"இச்சாலைக்குப் பெய்த காலத்தில் பவிழிய
சரணத்தார் உடைய..."[37]

என்ற கல்வெட்டு வரிகளால் அறியலாம்.

மாணாக்கிகள்

அக்காலத்தில் பெண்களும் கல்வி கற்றனர். அவர்கள் தீர்த்தங்கரர்களை ஆசிரியராகப் பெற்றிருந்தனர். இம்மாணாக்கிகள் இளநேச்சரத்துக் குரத்திகள், அரட்டநேமிக் குரத்திகள் என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். நான் இன்னாருடைய மாணாக்கியராக்கும் என்று தன் ஆசிரியரைப் புகழ்வதில் ஆர்வம் காட்டினர் எனலாம். இதை,

"ஸ்ரீ தீர்த்த படாரர் மாணாக்கிகள் இளநேச்சரத்துக் குரத்திகள்"
"ஸ்ரீமம்மைக் குரத்திகள் மாணாக்கியர் அரட்டநேமிக் குரத்திகள்"[38]

எனக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

கல்வெட்டில் 'கல்லூரி'

'கல்லூரி' என்ற கலைச்சொல் கல்லிலிருந்து உருவான கோயிலிலிருந்து வந்தது எனலாம். இச்சொல்லைக் "கல்லூரிநற் கொட்டிலா"[39] என்று சீவகசிந்தாமணிதான் முதன்முதலாகப் பதிவு

செய்துள்ளது. (995வது பாடல்) இந்நூல் சமணர் நூல் என்பது குறிப்பிடத்தக்கது. 'கல்லூரி' என்ற சொல்லிற்கு 1. கோயிலின் சுற்றுத் தாழ்வாரம், 2. திருச்சுற்றாலை, 3. முக்கியமான இடத்தின் ஓர் உறுப்பு'[40] என்று பல பொருள்கள் உள்ளன என்பதைக் கல்வெட்டுக்களால் அறியலாம்.

கல்வி பழங்காலத்தில் 'கோவில்களில் கற்பிக்கப்பட்டன. கல்வி கற்பிக்கப்பட்ட கோயில்கள் வித்யா மந்திர், வித்யாசாலை எனப்பட்டன. உயர்கல்வி கற்பிக்கப்பட்ட கோயில்கள் 'மகாமந்திர் வித்யாசாலை' எனப்பட்டன. ஆகவே கல்லூரிகள் கோயில்களிலிருந்து வந்தவை'[41] என்றும் அறியப்படுகின்றது.

தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி

தெய்வ மூர்த்திகளாகிய சிலைகள் மடங்களில் அமைக்கப்பட்டு விளங்கும் திருச்சுற்றாக அமைந்த கல்மண்டபம் தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி என அழைக்கப்பட்டது. இதை,

> ***"முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவா***
> ***ரத்து சுற்றுக் கல்லூரியில் தானஞ் செய்தருளா இருந்து"[42]***

என்ற வரிகளால் அறியலாம். மேலும் 'கோயில் கருவறைப் புறத்தும், கருவறைத் திருச்சுற்றிடத்தும் மூர்த்திகளுடன் அமைந்த தெய்வக் கோட்டங்கள் தேவாரச் சுற்றுக் கல்லூரி என்றும் அழைக்கப்பட்டன. இதை,

> ***"ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் கங்கை கொண்ட சோழபுரத்துக்***
> ***கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில்***
> ***வடபக்கத்து தேவாரச் சுற்றுக் கல்லூரிக்கு தானஞ் செய்தருளா***
> ***விருந்து"[43]***

என்ற கல்வெட்டாலும் அறியலாம். எனவே மேற்கூறிய கல்வெட்டுச் செய்திகளை உற்று நோக்கி அறியும்பொழுது இயற்கையாக அமைந்த கல்பாறையில் கோயில் கட்டப்பெற்றது என்பதும் கோயிலின் சுற்றுத் தாழ்வாரங்களான கல்மண்டபங்கள் கல்லூரிச் சாலைகளாக ஆகியிருக்கின்றன. அவைதான் உயர்கல்வி பெறும் இடங்களாக இருந்திருக்கின்றன. மேலும் 'உயர்கல்வி பெறும் இடங்கள் சமணர் கல்வெட்டுகளில் 'பெரும்பள்ளிகள்' என்றும் அழைக்கப் பெற்றிருக்கின்றன. இதை,

"வெண்குன்றக் கோட்டத்துப் பொன்னூர் நாட்டு ஸ்ரீ தண்ட புரத்து சித்த பெரும்பள்ளி இருக்கும் குரவனார்க்கு"[44]

என்ற கல்வெட்டால் அறியலாம்.

புகழ்பெற்ற கல்லூரிகள்

காஞ்சிபுரத்தில் புகழ்பெற்ற வடமொழிக் கல்லூரி இருந்துள்ளது. இங்குதான் புகழ்பெற்ற தர்மபாலர் கல்லூரித் தலைவராக இருந்தார். தொண்டை மண்டலத்திலும் கடிகாச்சலம் என்ற இடத்தில் ஒரு கல்லூரி இருந்துள்ளது. புதுச்சேரியில் அமைந்துள்ள வாகூரிலும் வடமொழிக் கல்லூரி இருந்துள்ளது'[45] என அறிகிறோம். மேலும் மதுரைப் பகுதியில் கீழக்குயில்குடி, குறண்டி ஆகிய இடங்களிலும் சமணர் பெரும்பள்ளிகளான கல்லூரிகள் இருந்தன'[46] என்று தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம் கூறுகிறார்.

கல்வெட்டில் 'பள்ளி'

'பள்ளி' என்ற கலைச்சொல் பாறையிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். அக்காலத்தில் சமணர்கள் தங்கும் இடம் 'பாழி' என்றும் 'பாளிய்' என்றும் அழைக்கப்பட்டன. இதை, சிவகங்கை மாவட்டம் திருமலை (இவ்வூர் சங்க காலத்தில் எருக்காடூர் என அழைக்கப்பட்டது). கல்வெட்டு, பட்டிபுரோலு கல்வெட்டு, மாங்குளம் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இதை,



என்ற எருக்காரூர் கல்வெட்டாலும்



என்ற மாங்குளம் கல்வெட்டாலும்



”49

என்ற பட்டிபுரோலு கல்வெட்டாலும் அறியலாம்.

இந்தப் பாளிய (கற்படுக்கை)தான் பின்நாளில் ‘பள்ளி’ என்றாகியது எனலாம். மேலும் உயர்கல்வி பயின்ற இடம் ‘பெரும்பள்ளி’ எனப்பட்டது என்றும் ஆய்வு முடிவுக்கு வரலாம்.

முடிவுரை

சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஆசிரியன் பாலாசிரியன் என்றும் நாடகம் கற்றுக் கொடுத்த ஆசிரியர் வாத்தியார் என்றும், வேதம் ஓதுவித்த ஆசிரியர் உபாத்தியாயர் என்றும், நாட்டிய ஆசிரியர் நட்டவனார் என்றும், பாடல் கற்பிக்கும் ஆசிரியர் கானபாடி என்றும் அழைக்கப்பட்டார்கள் என்பதற்குக் கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. மேலும் ஆசிரியர், புத்தகம், நூல்கள், பள்ளி, கல்லூரி ஆகிய கலைச்சொற்கள் கல்வெட்டிலிருந்தும் கோயில்களிலிருந்தும் வந்துள்ளன எனத் துணியலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. தினத்தந்தி, அருள்தரும் ஆன்மீகம், 29.11.16, பக்.19
2. தேவிரா, தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம், மு.ப.2007, பக்.378
3. அ.செல்வராசு, வினா-விடை அமைப்பில் கல்வெட்டு, பக்.86
4. ச.வே.சுப்பிரமணியன், பதி.ஆ., மெய்யப்பன் தமிழகராதி, டிச.2006, பக்.1026
5. மேலது, பக்.429
6. மேலது, பக்.394
7. ஜோதிட ரகசியங்கள் 1008, பக்.264
8. சி.கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி, ம.கா.ப. பக்.கஅஎ.
9. மேலது, பக்.கஅஅ.
10. மேலது, மேற்கோள் விளக்கம், பக்.கஅஅ.

11. நடன.காசிநாதன், கல்லெழுத்துக்கலை, மு.ப.1989, நவ,பக்.140.
12. தெ.கல்.தொ.17.கல்.243
13. மேலது, தொ.5, கல்.579
14. சு.இராமச்சந்திரன், புரட்சிப்பூக்கள், மு.ப.1986, பக்.33
15. செ.கந்தசாமி, மேனாள் முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, பேட்டி நாள் 25.02.2008
16. புலனச் செய்தி, நாள் 2.2.2018
17. சி.கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி, ம.கா.ப. மேற்கோள் விளக்கம், பக்.357
18. மெய்யப்பன், பதி.ஆ., தமிழகராதி, பக்.1055
19. பி.ஆறுமுகம், தேனூரும் அழகர்விழாக் கட்டமைப்பும், மு.ப.அக்.2009, பக்.255.
20. கள ஆய்வு நாள் 10.4.2012
21. தெ.கல்.தொ.7 கல்.45
22. தெ.கல்.தொ.3. கல்.66
23. தெ.கல்.தொ.5.கல்.706
24. தெ.கல்.தொ.2கல்.66
25. தளவாய்புரச் செப்பேடுகள்.கி.பி.887
26. அப்துல்கலாம் உரை, நாள் 10.3.2003
27. எட்வர்டு, சார்பு ஆய்வாளர், பேட்டி நாள் 4.4.2004
28. சொ.சாந்தலிங்கம், கல்வெட்டு வகுப்பு நாள் 10.11.13
29. தெ.கல்.தொ.5 கல்.647
30. கள ஆய்வு நாள் 10.4.2003
31. மு.வ.தமிழ் இலக்கிய வரலாறு, ப.251
32. தெ.கல்.தொ.5 கல்.647
33. சேரன்மாதேவி கல்வெட்டு எண்.695-1916
34. கள ஆய்வு நாள் 10.2.2009
35. மேலது, நாள் 2.2.1991
36. சி.கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி, ம.கா.ப., பதிப்புத்துறை, மேற்கோள் விளக்கம், பக்.கஅஅ.
37. மேலது, பக்.கஅஉ

38. மேலது, பக்.சகய.
39. ஆர்.கே.அழகேசன், கல்வெட்டுக்கள் காட்டும் கலைச்சொற்கள், நவம்பர் 2004, மேற்கோள் விளக்கம், ப.293
40. மேலது, ப.293
41. பாரதிய கல்வி வளர்ச்சிக்கழகம், ஞானோற்சவம், விவேகானந்தர் கல்லூரி, திருவேடகம், கோத்தாரிஉரை, நாள் 12.2.19
42. சி.கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி, ம.கா.ப., மேற்கோள் விளக்கம், பக்.உஎஅ.
43. தெ.கல்.தொ.2:1, பக்.106
44. தெ.கல்.தொ.19, கல்.51.
45. க.ப.அறவாணன், பாண்டியர்காலத் தமிழ் மக்கள் வரலாறு, மேற்கோள் விளக்கம், பக்.60,61
46. சொ.சாந்தலிங்கம், பேட்டி நாள்: 10.11.13
47. சொ.சாந்தலிங்கம், கல்வெட்டு வகுப்பு, நாள் 10.11.13
48. மேலது
49. மேலது

“ஒப்பிலாச் சைவமெங்கே யுண்மை யறங்களெங்கே
கைப்பிலாத் துய்யதமிழ்க் கல்வியெங்கே - தப்பிலாப்
பாவலரெங் கேசீமான் பாற்கரவே டேவைநகர்க்
காவலனா மேவியிடாக் கால்”

- சிவசம்புப்புலவர்

சங்கச் செய்திகள்

04.03.2019 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் கல்லூரியில் “தாத்தா பாட்டி மாணவர் குழு”வின் சார்பாக ‘விழுதுகளைத் தேடும் வேர்கள்’ என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெற்றது. தன்னம்பிக்கைப் பேச்சாளர் திரு.எம்.நௌசாத் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார். உதவிப் பேராசிரியர் முனைவர் அ.நந்தினி அனைவரையும் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா.நேருஜி நன்றியுரை நல்கினார்.

13.03.2019 அன்று முற்பகல் 10.30 மணியளவில் கா.நமச்சிவாய முதலியார் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் தமது உரையில், “மாணவர்கள் படித்துப் புரிந்து கொள்ள உதவும் வகையில் பல உரைநடை நூல்களை எளிய நடையில் எழுதிய ஆசிரியர். நான்காம் தமிழ்ச்சங்கத்தில் வித்துவானாகப் பணியாற்றிய வித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களிடம் பதிமூன்று ஆண்டுகள் தமிழ் பயின்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனித்தமிழ் வித்துவான் தேர்வு நடப்பதற்குக் காரணமானவர்” என்று குறிப்பிட்டார். கல்லூரி முதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு, கா.நமச்சிவாய முதலியார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

20.03.2019 அன்று திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை சார்பில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கு இடையிலான கலை இலக்கியப் போட்டிகளில் பங்கேற்று, இளங்கலைப் பிரிவில் பேச்சுப்போட்டியில் முதலாம் ஆண்டு மாணவி பிரியரஞ்சனி முதல் பரிசும், கவிதைப் போட்டியில் முதலாம் ஆண்டு மாணவர் தெய்வம் இரண்டாம் பரிசும், நாட்டுப்புறப்பாடல் போட்டியில் முதலாம் ஆண்டு மாணவி வைஷ்ணவி முதல் பரிசும் பெற்றனர். முதுகலைப் பிரிவில், முதுகலை முதலாம் ஆண்டு மாணவி த.கார்த்திகா கவிதைப் போட்டியில் முதல் இடமும், பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றார்.

21.03.2019 அன்று சங்க நிறுவனர் வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்களின் 153-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மற்றும் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்களின் நூல் வெளியீட்டு விழா கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. சங்கத் தலைவர் மாட்சிமை தாங்கிய முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். சென்னைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் ய.மணிகண்டன் அவர்கள் இரா.இளங்குமரனாரின் 'மரபுப்பா எளிதப்பா', 'நாலடியார் தெளிவுரை' மற்றும் 'இலக்கண உரையாசிரியர்கள் - தொல்காப்பியம்' ஆகிய மூன்று நூல்களை வெளியிட, கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் நூல் முதல்படிகளைப் பெற்றுக்கொண்டார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும் கல்லூரி துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நன்றியுரையும் நல்கினர்.

23.03.2019 அன்று செந்தமிழ்க் கல்லூரி மேனாள் மாணவர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு தொடக்கவிழா நடைபெற்றது. கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார். மேனாள் மாணவர் சங்கத் தலைவர் மு.இளங்கோவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராகக் கவிஞர் மூரா பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். கவிஞர் மூரா அவர்களுக்கு 'நக்கீரர்' விருதினை சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் முன்னிலை வகித்தார். மேனாள் மாணவர் சங்கச் செயலாளர் புலவர் வை.சங்கரலிங்கம் நன்றி கூறினார். பிற்பகலில் நடைபெற்ற நிறைவு விழாவிற்குச் சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். மேனாள் மாணவர்கள் ரத்தினம், மீனாம்பிகை ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேனாள் மாணவர் சங்கத் துணைத்தலைவர் கரு.முருகேசனார் அனைவரையும் வரவேற்றார். பேராசிரியர் முனைவர் கு.ஞானசம்பந்தன் அவர்கள் சிறப்புரையாற்றினார். மேனாள் மாணவர் சங்கப் பொருளாளர் ஜ.ஈஸ்வரி,

துணைத்தலைவர்கள் ஜெயந்தி, ஆறுமுகப்பெருமாள் ஆகியோர் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். கல்லூரியில் பயிலும் இந்நாள் மாணவர்களுக்குக் கலை, இலக்கியப்போட்டிகள் நடத்தி, வெற்றி பெற்றோருக்கு மேனாள் மாணவர் சங்கத்தினர் பரிசுகள் வழங்கினர். சென்னை லயோலா கல்லூரி கலை இலக்கிய ஊடகத்துறை மாணவர்களின் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

26.3.2019 அன்று கல்லூரியில் 'கணினித் தொழில்நுட்பத்தில் சங்க இலக்கியமும் சுவடியியலும்' என்ற தலைப்பிலான பன்னாட்டுப் பயிலரங்கம் நடைபெற்றது. கல்லூரிச் செயலர் தலைமையும் சங்கச் செயலர் முன்னிலையும் வகித்தனர். மைசூர் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் இந்திய மொழிகள் சொல் தரவக மேம்பாட்டு மைய முன்னாள் தலைவர் ராமமூர்த்தி, அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் நிரலாளர்கள் அகிலன், சுவாமிநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். செந்தமிழ்க் கல்லூரியும் அமெரிக்காவின் தமிழ் அனிதம் என்ற அமைப்பும் இணைந்து இலக்கியங்களைக் கணினி மயமாக்குவது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்றார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள், ஒப்பிலக்கியப் பள்ளித் தலைவர் முனைவர் ச.கவிதா மற்றும் செந்தமிழ்க் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை இப்பயிலரங்கினை ஒருங்கிணைத்தனர்.

28.03.2019 அன்று கல்லூரியின் 62ஆவது ஆண்டுவிழா, விளையாட்டு விழா மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட நிறைவு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது. கல்லூரிச் செயலாளர் திருமிகு இராணி. ந.இலட்சுமி குமரன்சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார். சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தளித்தார். கவிஞர் மதுக்கூர் ராமலிங்கம் அவர்கள் சிறப்புரையாற்றினார். உதவிப் பேராசிரியர் மற்றும் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் மா.செல்வத்தரசி நன்றியுரையாற்றினார். துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மே திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

க.த.திருநாவுக்கரசு
(மே.5)

மயிலை சீனி வேங்கடசாமி
(மே.8)

த.வே.உமாமகேசுவரன் பிள்ளை
(மே.9)

பி.எஸ்.ராமையா
(மே.18)

கா.அப்பாத்துரை
(மே.26)

மா.இராசமாணிக்கனார்
(மே.26)

ஜெகசிற்பியன்
(மே.26)

ஆ.பூவராகம் பிள்ளை
(மே.28)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்னம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன்
இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு,
மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்,** 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1